
www.padippakam.com

# ஓசை

மே - யூன் 1990



'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

படிப்பகம்

www.padippakam.com

**அக்னி**

③

மே - யூலை

ஆசிரியர் குழு

அன்பளிப்பு: 3 டீ.எம்

வருடச் சந்தா: 20 டீ.எம்

தொடர்புகட்கு:

AGNI
Alleen str.17
7144 Asperg
West Germany

சந்தா அனுப்ப வேண்டிய விபரங்களுக்கு:

G.Kangatharan
Konto Nr.7817990054
BLZ 600 501 01
Landesgirokasse
7144 Asperg

அக்னியில் கையெழுத்துடன் இடம் பெறும் ஆக்கங்களின் கருத்துக்கள் ஆசிரியர் குழுவின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

முகவரியிடப்படாது வரும் ஆக்கங்கள், விமர்சனங்கள் பிரசுரிக்கப் படமாட்டாது.

## எதிரொலி

நாங்கள் யார் பக்கமும் இல்லை. ஜனநாயகத்தின் பக்கம். ஆனால், ஈழத்தில் இப்போது ஆயுதங்கள் ஆதிக்கம் செலுத்துகிறது. மக்கள் அந்த ஆதிக்கத்தில் இருந்து விடுபடும் வரை ஜனநாயக இயக்கங்கள் சாத்தியமில்லை.

- மங்கையற்கரசி அமிர்தலிங்கம்

வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. அச்சபையைக் கலைப்பதற்கான அதிகாரத்தை அரசாங்கம் கொண்டு வருமாறு புலிகள் கோரியிருப்பது தமிழ் மக்களின் நீண்ட கால நலனுக்கு விரோதமாகவே அமையும்.

- வாசுதேவா நாணயக்கார

தமிழ் மக்களுக்கு தலைவர்கள் என்று யாரும் இல்லை. எல்லோரையும் புலிகள் அழித்து விட்டார்கள். பாலசிங்கம் தலைவரல்ல. அவர் ஒரு புறோக்கர்

- ரஞ்சன் விஜயரட்னா

எம்மைப் பொறுத்தமட்டில் இன்றைய யுத்தம் பாஸிஸ வாதிகளுக்கும் அரசுக்கும் எதிரான யுத்தம். இந்த யுத்தத்தில் பாஸிஸ வாதிகளை ஒழிக்க அரசு எடுக்கும் நடவடிக்கையை ஏனைய எதிர்கட்சிகளுடன் சேர்ந்து ஆதரிக்கிகிறோம்.

-யோகசங்கரி பாராளுமன்றத்தில்

ஆயுதப் போராட்டத்தால் எதனையும் சாதிப்பது நீர் மேல் எழுத்தாகும். அகிம்சை வழி சென்று எதனையும் சாதிப்பது நிலைத்து நிற்கும்.

-லலித் அத்துலத்முதலி



படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் ஒரு யுத்தம்

கடந்த ஒரு வருட காலமாக சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடை பெற்று வந்த "இரகசியப் பேச்சுவார்த்தைகள்" முற்றுப் பெறாத நிலையில் பாரிய யுத்தம் ஒன்று பரவலாக கட்டவிழ்த்து விடப் பட்டுள்ளது. இத்தகைய மோதல் ஒன்று ஏற்படுவதற்கான அறிகுறிகள் முன்பே விடுதலைப் புலிகளின் அறிக்கைகள் வாயிலாகவும் அவசர அவசரமாக வெட்டப் பட்ட பதுங்கு குழிகள் மூலமாகவும் அறியக் கூடியதாக இருந்தாலும் இவ்வளவு சீக்கிரத்தில் யுத்தம் பலவந்தமாக தோற்றுவிக்கப் படும் என்பதை யாரும் எதிர் பார்த்திருக்கவும் மாட்டார்கள்.

வவுனியாவிலிருந்து புலிகளின் அனுமதியில்லாமல் இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினூடாக இந்த யுத்தம் ஆரம்பமாகியது . இதன் பின் பருத்தித் துறையில் பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பு, மட்டக்களப்பில் முஸ்லீம் இளைஞர் சிங்களப் பெண்ணுடன் வைத்திருந்த தகாத உறவில் ஏற்பட்ட தகராறில் புலிகளுக்கும் பொலிசாருக்கும் இடையே தலைதூக்கிய முரண்பாடுகள் ஆகியன இம் மோதலுக்கு காரணங்களாக கூறப் பட்டாலும் வடக்கு கிழக்குப் பகுதிகளை முற்று முழுவதுமாக தமது கட்டுப் பாட்டில் வைத்திருக்கவும் ஈழ மக்கள் புரட்சி கர விடுதலை முன்னணிக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையே ஏற்பட்டு வரும் பேச்சுவார்த்தைகளை தடுத்து நிறுத்துவதற்கும் இந்த யுத்தத்தை விடுதலைப் புலிகள் மேற் கொள்வது தவிர்க்க முடியாததாக அமைந்தது.

ஜூன் எழாம் , திகதியிலிருந்து ஆரம்பிக்கப் பட்ட இந்த யுத்தத்தினால் இரண்டரை லட்சம் மக்கள் அகதிகளாக்கப் பட்டுள்ளனர். ஐயாயிரத்திற்கும் அதிகமான மக்கள் இந்தியாவிற்கு அகதிகளாக இடம் பெயர்ந் துள்ளனர். கொல்லப் பட்ட மக்களினதும் போராளிகளினதும் எண்ணிக்கை இன்னும் சரியாக கணக்கிடப் படவில்லை. கிழக்கு மாகாணங்களில் இராணுவம் புலிகளின் கட்டுபாட்டிற்குள் இருந்து விடுவித்துள்ளதோடு வடபகுதியை தமது கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வர ஆகாய மார்க்க மூலமான தாக்குதல்களை பரவலாக மேற் கொண்டு வருகிறது.

சிங்கள மக்களிடையே இது ஒரு தேச பக்த யுத்தமாக பிரச்சாரப் படுத்தப் பட்டுள்ளது. அவர்களிடம் கடந்த காலங்களில் இருந்த இந்தியத் தலையீடு குறித்தான அச்சம் அகன்று போய்விட்டது. விடுதலைப் புலிகளுக்


படிப்பகம்

www.padippakam.com

கெதிரான யுத்தத்தில் எதிர்கட்சிகள் தரப்பிலிருந்து எதுவித எதிர்ப்பும் தெரிவிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. த.வி.கூட்டணி எம்பிக்கள் "தமிழ் மக்களை அழிக்காமல்" விடுதலைப் புலிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். ஒரு புறம் யுத்தத்தை நடாத்திக் கொண்டு மறுபுறம் ஈழுமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கிய உறுப்பினர்களை சென்னையில் படுகொலை செய்து விட்டு சாமர்த்தியமாக தமிழக அரசின் உதவியோடு புலிகள் ஈழத்திற்கு தப்பி போயுள்ளார்கள்.

இந்த யுத்தத்தில் சிறிலங்கா அரசு வெற்றி பெறுமானால், அது தமிழ் பேசும் மக்களுக்கு பாதகமாகவே முடியும் என்பது மட்டுமல்ல, வடக்கையும் கிழக்கையும் பிரித்து ஈழுப் போராட்டத்தை மழுங்கடிப்பதற்கான அரசின் நயவஞ்சகத் திட்டமும் செயற் படுத்தப் படும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் அரசியற் தந்திரோபாயமற்ற இராணுவ மேலாதிக்கத் தன்மையினால் ஈழுப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான போராளிகளும் முற்போக்கு ஜனநாயக சக்திகளும் அநியாயமாக கொல்லப் பட்டதுடன் போராடும் சக்திகளுக்கிடையிலான ஐக்கிய முன்னணி கூட கட்டியெழுப்ப முடியாத நிலையும் உருவானது. ஏகப்பிரதிநிதித்துவ சர்வதிகாரப் போக்கினால் கருத்துச் சுதந்திரங்கள் நசுக்கப் பட்டதுடன் மாற்று அமைப்புக்களை எதிரி முகாம்கள் நோக்கி சரணடையும் நிலையையும், சிறிலங்கா அரசுக்கு சாதகமான பல சூழ்நிலைகளையும் உருவாக்கிக் கொடுத்தன. இன்று எந்த வித அரசியல் கண்ணோட்டமுமின்றி ஆயுதங்களை கையிலெடுத்து போராட வேண்டிய நிலமைகளுக்குத் தள்ளப் பட்ட சிறுவர்கள் உறுதிமிக்க போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பொறுத்த மட்டில் ஆயுதம் மட்டும்தான் அத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு என்கிற தவறான சித்தாந்தங்களால் ஆட்கொள்ளப்பட்டு, அரசியல் தலைமையின் வங்குரோத்துதனமான அரசியற் குத்துக் கரணங்களுக்குப் பலிக்கடாக்களாக ஆக்கப் பட்டுள்ளார்கள்.

புரட்சி ஆரம்பமாகி இருக்கும் போதுதான், அதற்கு முன்பாக அல்ல, ஒரு புரட்சியை எப்படி நடத்துவது என்பதை ஒருவர் கற்றுக் கொள்ள முடியும். வெகுஜனங்களின் சரியான ஆக்கபூர்வமாக கருத்துக்களில் நம்பிக்கை வைத்து அவர்களது புரட்சிகரமான அனுபவத்தை தொகுத்துரைத்து சரியான பாதையில் வழி நடத்திச் செல்வது ஒரு புரட்சிகர தலைமையின் கடமையாகும். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இத்தகைய தலைமைக்கு தகுதியற்றவர்களாகவும் ஈழுப்போராட்டத்தின் பாரிய பின்னடைவுக்கு காரணகர்த்தாக்களாகவும் தமது செயற்பாடுகள் மூலம் நிரூபித்து வருகிறார்கள்.

அக்னி

படிப்பகம்

www.padippakam.com

# உலகப் போரும் பாசிசத்தின் தோல்வியும்

திருமலைக் குமரன்

நடந்து முடிந்த இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பாசிசத்தை தோற்கடித்து இன்றுடன் நாற்பத்தைந்து வருடங்கள் ஆகிவிட்டன. கோடிக்கணக்கான மக்களை பலி கொண்ட இவ் யுத்தத்தின் கோரங்கள், அழிவுகள் பலர் மனதை விட்டு இன்று மறைந்து கொண்டாலும் சரித்திரத்தில் பதிந்தவைகளை யாராலும் அகற்ற முடியாததுதான். இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு முக்கிய காரணமாக இருந்த ஜெர்மனி யுத்தத்தின் பின் கிழக்கு மேற்குமாகப் பிளவுபட்டு நாற்பத்தைந்து வருடங்களின் மீண்டும் ஒன்றாக இணைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வரும் இந் நேரத்தில் யுத்தத்தின் அழிவுகளை நினைவு கூராமல் இருக்கமுடியாததுதான்.

இரண்டாவது உலக மகா யுத்தம் தவிர்கக முடியாததாக இருந்தது. முதலாளித்துவத்தின் உச்சக் கட்டமான ஏகாதிபத்தியம் எப்போதும் யுத்த அபாயத்தையே நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.1930ம் ஆண்டு காலப் பகுதிகளில் முதலாளித்துவ நாடுகளுக்கிடையே நிலவிய பொருளாதார நெருக்கடிகள் அந்நாடுகளுக்குள்ளேயும், வெளியேயும் இருந்த முரண்பாடுகளைத் தீவிரமாக்கி விட்டிருந்தன. முதலாளித்துவ நாடுகளில் இருந்த ஏகபோக முதலாளிகள் தொழிலாளர்கள் மீதான சுரண்டல்களை அதிகரித்திருந்தார்கள். தங்களுடைய சொந்த நாடுகளிலும் தமது காலனித்துவ நாடுகளிலும் விவசாய விளை பொருள்களின் விலைகளை குறைத்தார்கள்.தங்கள் அயல் நாட்டுக் கொள்கைகளை இனவெறி வாதத்தின் மீதும், யுத்தத் தயாரிப்புகளின் மீதும் அடிப்படையாகக் கொண்டிருந்த சமயத்தில், ஏகாதிபத்திய நாடுகள் அவற்றின் உள்நாட்டு நிர்வாகத்தில் வரக்கூடிய யுத்தத்தில் பின்னணி தளத்ததைக் கெட்டிப் படுத்துவதற்காக அவசியமான சாதனங்களாக தொழிலாளி, விவசாய வெகுஜனங்களின் மீது ஒடுக்குமுறையையும், எதிர்ப்புரட்சிகர பயங்கரவாதத்தையும் நிறைவேற்றின.

இந்த நிலமைகளைச் சமாளிப்பதற்கும் அதற்கு பரிகாரம் காணவும் ஏகாதிபத்திய யுத்தத்தை ஆரம்பிப்பது தவிர்க்க முடியாததாக அமைந்தது. ஏகாதிபத்திய நாடுகளான ஜெர்மனி, இத்தாலி,ஜப்பான் ஆகிய நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு முறை ஒழிக்கப் பட்டு ஒரு பாசிச ஆட்சி முறைகளுக்கான வழி முறைகள் கையாளப் பட்டன.

ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் பல்வேறு இடங்களில் தமது ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பித்தன. உண்மையில், இந்த யுத்தம் தேசிய விடுதலை இயக்கங்களுக்கெதிரானதாகவும், பிரிட்டிஷ், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற

www.padippakam.com

நாடுகளின் ஏகாதிபத்திய நலன்களுக்கு எதிரானதாகவும் அமைந்திருந்தது. ஆரம்பத்தில் மேற்கு ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் மறைமுகமாக ஆதரித்தன. இத்தாலி எதியோப்பியாவை ஆக்கிரமித்து அல்பேனியா மீது போர் தொடுத்தது. 1937 இன் ஆரம்ப கட்டத்தில் நாஜி ஜேர்மனி ஆஸ்திரியாவைக் கைப்பற்றி செக்கோசெலவாக்கியாவை ஆக்கிரமிக்கத் தெடங்கியது. ஜப்பான் சீனா மீது படையெடுத்தது. பொருளாதார நெருக்கடிகளின் தாக்கங்களினால் இம் மூன்று ஏகாதிபத்திய அரசுகளும் இரண்டாவது உலக யுத்தத்தை ஆரம்பித்தன. இப் பாசிசப் போக்கிற்கு எதிராக போராட வேண்டிய தேவை பிரிட்டன், பிரான்ஸ் போன்ற முதலாளித்துவ நாடுகளுக்கு இருந்தாலும் சோவியத் யூனியனின் சோசவிப் புரட்சியின் வெற்றியையும், ஜரோப்பாவில் தொழிலாள வர்க்க எழுச்சியையும், தமது காலனித்துவ நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்களின் போராட்ட முனைப்பையும் கண்டு அச்சமுற்றிருந்தார்கள். இதன் காரணத்தினால் அவர்கள் இப்பாசிச வளர்ச்சிப் போக்கை இவைகளுக்கெதிராக திசை திருப்புவதில் அக்கறையாக இருந்தார்கள்.

உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக வெளிக்கிளம்பிய பாசிச சர்வதிகாரத்தை வேரறுக்கவும், ஆக்கிரமிக்கப் பட்ட நாடுகளை மீட்கவும் சோவியத் யூனியன் பிரான்ஸ்,பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கிடையில் பேச்சுவவார்த்தைகள் இடம்பெற்றன. 1939இல் ஆரம்பித்த இப் பேச்சுவார்த்தைகளில் தமது சொந்தப் பாதுகாப்பையும், சொந்த நலன்களையும் பாதுகாப்பதில் மட்டும் பிரான்சும் பிரிட்டனும் அக்கறையாக இருந்ததினாலும் சோவியத் யூனியனதும் அதனது அண்டை நாடுகளினதும் பாதுகாப்பைப் பொறுத்தவரை அலட்சியமாக அவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்ததினாலும் இப்பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டன. இதே வேளையில் பிரிட்டனும் பிரான்சும் நாஜி ஜேர்மனியுடன் ராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளை நிகழ்த்திக் கொண்டிருந்தன.

இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் நாஜி ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு கிழக்கைரோப்பிய நாடுகளை நோக்கித் திரும்பியிருக்கும். இத்தகைய சூழ்நிலமைகளில் சோவியத் யூனியன் பாசிச ஆக்கிரமிப்புக்கெதிராக தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. ஆகவே நாஜி ஜெர்மனியுடன் பரஸ்பர ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் பாசிசப் பயங்கரவாதத்திலிருந்து தற்காலிக பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள சோவியத் யூனியன் முயன்றது. 1939ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாஜி ஜெர்மனிக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் ஏற்படுத்தப் பட்ட பரஸ்பர ஒப்பந்தமொன்றினால் 1942 ஜுன் மாதம் வரை சோவியத் யூனியன் நாஜிக்களின் ஆக்கிரமிப்பிலிருந்து தற்காலிக பாதுகாப்பை வென்றெடுக்க முடிந்தது.


படிப்பகம்

www.padippakam.com

1940 இலிருந்து 1941 வரையும் நாஜிப்படைகள் நோர்வே, டென்மார்க், ஒல்லாந்து, கிரீக், பெல்ஜியம், யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டன. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளை தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்த ஹிட்லர் சோவியத் யூனியன் மீது தாக்குதல் புரியத் தயாராகினான். 1942ம் ஆண்டு சோவியத் யூனியனுக் கெதிரான யுத்தம் நாஜிப் படைகளால் மேற் கொள்ளப் பட்டது. யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் நாஜி படையினர் சோவியத் யூனியனின் கணிசமான பகுதிகளை கைப்பற்றிக் கொண்டனர். பைலா, ராஷ்யா, வித்துவேனியா, மால்டாவியா, எஸ்டோனியா போன்ற பகுதிகள் நாஜிக்களின் வசமானபின், லெனின் கிராட் முற்றுகையிடப்பட்டு மாஸ்கோ மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சோவியத் ரஷ்யா

பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து சமாளிக்கும் பொருட்டு யுத்த அபாயத்திற்குள்ளாக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து பல பெரிய தொழிற் சாலைகளை பின்னணிப் பிரதேசங்களுக்கு மாற்றி விட்டது. இதேவேளை ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவும் தத்தம் நாடுகளில் மக்களிடம் இருந்து வெளிக் கிளம்பிய நிர்ப்பந்தம் காரணமாகவும் பிரிட்டனும் அமெரிக்காவும் சோவியத் யூனியனுடன் கூட்டணி அமைத்துக் கொள்ள முன்வந்தன.

சோவியத் யூனியன் நாஜிப்படைகளுக் கெதிராக உறுதியான யுத்தத்தை நடாத்தத் தொடங்கியது. லெனின்கிராட், மாஸ்கோ ஆகிய நகரங்களைப் பாதுகாப்பதற்காக சோவியத் செஞ்சேனையும் சோவியத் மக்களும் வீரஞ் செறிந்த போராட்டங்களை நடாத்தினார்கள். 1942 நவம்பரிலிருந்து 1943 பெப்ரவரி வரையிலும் இந்த நகரங்களைப் பாதுகாப்பதற்காக நீடித்த யுத்தத்தில் சோவியத் செஞ்சேனை 3,30,000 நாஜித் துருப்புக்களை நிர்மூலமாக்கியது. நாஜிக்கள் வசம் கைப்பற்றப்பட்டிருந்த பிரதேசங்களில் மூன்றில் இரண்டு பகுதிகள் செஞ்சேனையால் மீட்கப்பட்டன.

சோவியத் யூனியனில் நாஜிப்படைகளுக்கு ஏற்பட்ட தோல்வி ஹிட்லரின் பாசிச சர்வதிகாரத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. இத்தாலியில் முசோலினியின் சர்வதிகார ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பல்கேரியா, ருமேனியா, பின்லாந்து, நோர்வே, போலந்து, யூகோஸ்லாவியா, செக்கோசெலாவாக்கியா ஆகிய நாடுகள் 1944ல் செஞ்சேனைகளால் நாஜிக்கள் வசமிருந்து விடுவிக்கப்பட்டன. அமெரிக்க, பிரிட்டிஷ் துருப்புக்கள் பிரான்ஸ் வழியாகவந்து ரைன் நதியைக் கடந்து மேற்கு ஜெர்மனிக்குள் நுழைந்தன. நாஜிப் படைகளின் பிரதான பலம் கிழக்கைரோப்பாவை நோக்கி குவிந்து கிடந்தமையால் அமெரிக்க பிரிட்டிஷ் துருப்புக்கள் பாரிய எதிர்ப்புக்களை எதிர்கொள்ளவில்லை.

1944 இன் இறுதியில் செஞ்சேனை ஜெர்மனியின் பிரதான தளமாக விள

படிப்பகம்

www.padippakam.com

ங்கிய கிழக்கு ரஷ்யாவிற்குள் நுழைந்தன. இந்த இடம்தான் ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக்கு சிறந்த தளமாக அமைந்திருந்தது. 1945 ஏப்ரலில் சோவியத் ராணுவம் பெர்லினை தாக்குவதற்கான முயற்சிகளை எடுத்தது ஹிட்லரின் பாசிச சர்வதிகாரத்தின் வீழ்ச்சியானது உலக மகா யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்தது. மே மாதம் இரண்டாம் திகதி பெர்லின் கைப்பற்றப்பட்டது ஹிட்லரின் பாராளுமன்றத்தின் மீது சோவியத் யூனியனின் செஞ்சேனை செங்கொடியை ஏற்றி, ஜெர்மனியை நிபந்தனையற்ற முறையில் சரணடையச் செய்தது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஹிட்லர் சோவியத் ரஷ்யாவையும் அதன் சோசலிச அமைப்பையும் வேரோடு அழிக்கத் திட்டமிட்டிருந்தான். ஸ்டாலின் யுத்தத்தை விரும்பியதன் நோக்கம் ஏகாதிபத்திய நாடுகள் பலவீனமாக வேண்டுமென்பதுதான். சோவியத் யூனியனுடனான யுத்தத்தில் அந்நாட்டுக்கெதிரான தாக்குதலை நடாத்துவதற்கெதிராக நாஜிக்களின் உளவுப் பிரிவினால் பல தகவல்கள் முன் கூட்டியே திரட்டப் பட்டிருந்தன. சோவியத் யூனியன் சம்பந்தப் பட்ட ஆய்வுகள், நகரங்களுக்கான பாதைகள், பாலங்கள், பற்றிய விபரங்கள், வரைபடங்கள் மேலும் சோவியத்தின் சோசலிச அரசுக்கெதிரான உள்ளூர் கலவரங்கள் ஆகியன ஆராயப்பட்டிருந்தன. சோவியத் யூனியனுடனான யுத்தத்தில் ஹிட்லர் தான் வெல்ல முடியாது என்பதை முன்னரே அறிந்திருந்தான். உண்மையில் ஜெர்மனிக்கெதிரான யுத்தத்தை தேசபக்த யுத்தமாகவே சோவியத் மக்கள் நினைத்து போராடினார்கள். இதையேதான் ஜெர்மனி கைப்பற்றப் பட்ட தினமான மே 9ல் ஸ்டாலின் மக்களுக்கு விடுத்த பிரகடனத்தில் இந்தத் தினம் சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் வெற்றிதினமாக கொண்டாடப் படுமென அறிவித்திருந்தார்.

இரண்டாம் உலக யுத்தம் முடிவுற்றதும் நாம் ஒன்றை முக்கியமாக அவதானிக்க கூடியதாக இருக்கிறது. நாற்பது வருடங்கள் கழிந்து விட்டாலும் மேற்கு ஜெர்மனியில் நாஸிசம் செத்துவிட வில்லை. "நியோ நாஸிசம் மெல்ல மெல்ல துளிர் விட்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. சிறு சிறு குழுக்களாக அவர்கள் வெளிநாட்டவர்க்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். தேசியவாத வீச்சுக்கள் இன்று கூர்மை பெற்று வருவதுடன் இணையப் போகும் ஜெர்மனியில் இது சற்று அதிகமாகவே காணப்படலாம். ஐரோப்பாவில் பலம் வாய்ந்த நாடாக ஜெர்மனி திகழும் பட்சத்தில் "நியோ நாஸிசம்" சக்தி வாய்ந்த அமைப்பாக மாற இடமுண்டு ●

---

வாசகர்களே, நண்பர்களே!

தங்களிடமிருந்து ஆக்கங்கள், விமர்சனங்கள் ஆகியவற்றை எதிர்பார்க்கிறோம். ஆக்கங்களை அனுப்பும் போது பெயயர் முகவரிகளை தெளிவாகக் குறிப்பிடவும்.

ஆசிரியர் குழு


படிப்பகம்

www.padippakam.com



■ Slain EPRLF members: swift and merciless strike




மீண்டும் ஒரு சகோதரப் படுகொலை தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. நீண்ட நாட்களாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(EPRLF) இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களை அழித்தொழிப்பதற்கான திட்டத்தை சென்னையில் வைத்து நிறைவேற்றிக் கொண்ட விடுதலைப்புலிகள் தமிழக மக்களிடையே இதுவரை காலமும் தமக்கு இருந்த ஆதரவையையும் கூடவே இழந்து விட்டிருக்கின்றனர். சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தோற்றுவிக்கப் பட்டுள்ள அர்த்தமற்ற யுத்தத்தினால் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப் பட்டும் , லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப் பட்டுக் கொண்டிருக்கையில் விடுதலைப் புலிகள் இப்படுகொலையை அவசர அவசரமாக மேற் கொண்டிருப்பதன் பின்னணியை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

1981ம் ஆண்டு ஈரோஸ் அமைப்பின் மாணவர் பிரிவானது முரண்பாடுகள் காரணமாக பிரிந்து சென்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியாக தோற்றம் பெற்றது. ஆரம்ப காலங்களில் சாதி ரீதியாக ஒடுக்கப் பட்ட மக்களிடையே அரசியல் வேலைத்திட்டங்களை முன்வைத்து செயற் பட்டு வந்ததுடன் ராணுவ ரீதியாக அரச படைகளுக்கெதிராக தாக்குதல்களை மேற் கொள்ள முற்பட்டது. சுத்த ராணுவக் கண்ணோட்டத்தை மட்டும் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் தமக்குப் போட்டியாக வரக் கூடிய விடுதலை அமைப்புக்களை திட்டமிட்டு அழிப்பதனூடாக தமிழ் பேசும் மக்களின் தலைமையை ஏகப்பிரதிநிதித்துவ முறையில் கைப்பற்ற விரும்பினர். இதனடிப்படையில் டெலா இயக்கத்தலைவர் ஒபரோய் தேவன், டெலி இயக்கதலைவர் ஜெகன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னணி உறுப்பினர் சுந்தரம் உட்பட பல போராளிகளை கொன்று குவித்தனர். இக் கொலைகளுக்கு துரோகிகள், சமூக விரோதிகள், இனந் தெரியாது நடந்தவை என பல்வேறு காரணங்களை அவர்கள் மக்கள் முன் வைத்தனர். 1985ம் ஆண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முரண்பாடுகள் முகிழ்ந்தெழத் தொடங்கியிருந்தன. அவ்வாண்டு நவம்பர் மாதம் ஈ.ம.பு.முன்னணியின் வன்னியப் பிராந்திய தளபதியான றேகன் என்பவர் விடுதலைப் புலிகளால் படுகொலை

படிப்பகம்

www.padippakam.com

செய்யப் பட்டதைத் தொடர்ந்து இப்பகை முரண்பாடுகள் இரு அமைப்புக்களையும் ஒருவரையொருவர் பழிவாங்கும் குரோத உணர்விற்கே இட்டுச் சென்றன. 1986ம் ஆண்டு மே மாதம் சமூக விரோதிகள் எனக் காரணம் கற்பிக்கப் பட்டு டெலோ இயக்கத்தலைவர் சபாரட்னம் உட்பட 300 போராளிகள் மனித நாகரீகம் வெட்கித் தலைகுனியும் வண்ணம் கோரமாகப் படுகொலை செய்யப் பட்டனர். இச்சகோதரப்படுகொலை ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு பாசிசப் போக்கொன்றின் அச்சுறுத்தல் ஒன்றை விடுதலைப் புலிகள் அமைப்பினூடாக உருவாக்கியது.

தமக்கு நிகராக வரக் கூடிய அமைப்புக்களையும் அவற்றின் போராளிகளையும் திட்டமிட்டு அழித்தொழித்த விடுதலைப் புலிகள் 1986ம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஈ.ம.பு. வி முன்னணி மீது பாரிய தாக்குதலை மேற் கொண்டனர். இத்தாக்குதலின் போது போராளிகள் இழப்போடு ஈ.ம.பு.வி. முன்னணி பின் வாங்கிக் கொண்டது. இதன் பின்னர் ஈரோஸ் அமைப்பு தவிர்ந்த அனைத்து அமைப்புக்களும் விடுதலைப் புலிகளால் ஈழத்தில் செயற்பட முடியாதவாறு தடை செய்யப் பட்டன.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இடைக்காலத் தீர்வில் சக இயக்கங்களுக்கும் உரிமை வழங்கப் பட்டதை ஒப்புக் கொள்ள முடியாத விடுதலைப் புலிகள் இந்திய ராணுவத்துடன் பாரிய மோதலை மேற்கொண்டனர். இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று மாகாணசபை அமைத்துக் கொண்ட ஈ.பி. ஆர்.எல் எப், ஈ.என்.டி.எல். எப், ஆகிய அமைப்புக்கள் இந்திய ராணுவத்துடன் சேர்ந்து விடுதலை புலிகளுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக் கெதிரான பழிவாங்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்த நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளின் கடந்த கால‌ச் செயற்பாடுகளை ஒத்திருந்ததுடன் பலவீன முற்றிருந்த விடுதலைப் புலிகளுக்கு மக்கள் மத்தியில் அனுதாப ஆதரவை பெற்றுக் கொடுத்தன.

பரம எதிரிகளாக போரிட்டுக் கொண்டிருந்த சிறிலங்கா அரசுடன் உடன்படிக்கைக்கு விடுதலைப் புலிகள் சென்றமைக்கு மேற் கூறிய பழிவாங்கல் நடவடிக்கைகளும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இன்று இந்தியாவால் கைவிடப்பட்ட நிலையில் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஈ.பி.ஆர். எல்.எப் மேற்கொள்ளும் பட்சத்தில் தமது நீண்டகால நலனுக்கு அவை பாதகமாகவே அமையும், என்பதை உணர்ந்த விடுதலைப் புலிகள் தமிழக அரசுடன் தமக்கிருந்த பரஸ்பர உறவை சாதகமாக்கி இப்படுகொலைகளை மேற் கொண்டிருக்கிறார்கள். இப் படுகொலைகள் நடைபெறுவதற்கு முன்னால் கொல்லப்பட்ட முக்கிய உறுப்பினர்கள் சிறலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைகள் பற்றி கலந்துரையாடிக் கொண்டிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

## தேடலும் ஐக்கியமும். (உ)

ஞானா

எமது நாட்டில் காலனியல் மாற்றங்கள் ஊடான நிலையில் முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பு உருவாக்கப் பட்டாலும் நடைமுறையில் முழுமையான நிலப்பிரபுத்துவ கருத்துக்களினாலும் நடைமுறைகளினாலும் இறுகப் பிணைக்கப்பட்ட ஒரு சமூகமாக உள்ளது.

இதனால் நாட்டின் அரசியல் சூழ்நிலைக் காரணங்களினால் புலப்பெயர்வுக்களுக்கு ஆளான எமது மக்களினால் இவ்வைரோப்பிய சூழ்நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ சமூக அமைப்புடன் கருத்து ரீதியில் சமரசம் செய்து கொள்ள முடிவதில்லை. இதனால் புலம் பெயர்ந்தவர்களின் பெரும் பகுதியினர் பொருளாதார சேமிப்பிற்காகவே இங்கு வாழ்கின்ற நிலையும், நாட்டில் சீரான நிலை ஏற்பட்டால் நாடு திரும்பிவிட வேண்டும் என்ற கருத்தும் கொண்டவர்களாக உள்ளனர். இவர்களே இங்கும் தமது பிற்போக்கான நிலப்பிரபுத்துவ கருத்துக்களான ஜாதி, பெண்ணடிமைத்தனம், சம்பிரதாயங்கள் போன்றவற்றை கொண்டிருப்பதுடன் தீவிரமான தேசிய விடுதலை இயக்கங்களின் ஆதரவாளர்களாகத் திகழ்கின்றனர்.

தமது பொருளாதார நலன்களுக்காக முதலாளித்துவசார்பு தேசியவிடுதலை ஸ்தாபனங்களின் ஆதரவாளர்களாகவே காணப்படுவர். இதுவே பெரும்பாலான தேசிய வாதிகளின் தளமுமாகும். இது பலதரப்பட்ட கருத்துக்களும் வாழக்கூடிய மத்திய தரவர்க்க புலமாகவும் திகழ்கின்றது. இதனால் இதற்குள் அதனுடைய சமூக குணாம்சமான அதிதீவிரவாதம், கற்பனாவாதம், ஊசலாட்டம் ஆகிய அத்தனை பண்புகளையும் காணமுடியும்.

இக்காரணத்தினால், இதற்குள் பிற்போக்கு தேசிய வாதிகள், தேசியவாதிகள் சமூக உதிரிகள், முற்போக்கு தேசியவாதிகள், இடது தீவிரவாதிகள் என்கிற எல்லாப் பண்புகளையும் காணமுடியும். இப்பண்புகளில் உள்ள ஒவ்வொருவரையும் நடைமுறைரீதியாகவும் செயல்பாட்டு அடிப்படையிலும் இனங்காணுதல் என்பதே தேசிய விடுதலையில் சரியான போக்கில் அணுகுபவர்களின் முதல் கடமையாக இருக்கும். இவ்வேலைத்திட்ட அடிப்படையில் வெளிநாடுகளில் உள்ள இவர்களை பொதுவாக பிற்போக்கு தேசியவாதிகள், முற்போக்கு தேசிய வாதிகள், சமூக உதிரிகள், இடது தீவிரவாதிகள் என இனங்காண முற்படுகிறேன்.

## பிற்போக்கு தேசிய வாதிகள்

எப்போதும் அரசியல் பொருளாதார பின்னணிகளே ஒரு சமூகத்தின் இருப்பைத் தீர்மானிக்கின்ற சக்திகளாகத் திகழ்கின்றன. அரசியல் பொருளாதார இயங்கியலில் ஏற்படுகின்ற நெருக்கடிகளே அதன் சமூகப் பின்னணிகளிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அவ்வாறான தாக்கங்கள் ஊடாகவே சமூகமாற்றங்களும் நிகழுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

எமது நாட்டிலும் இயல்பான அரசியல், சமூக, பொருளாதார போக்குகளில் ஏற்பட்ட தாக்கங்களின் விளைவே எமது தேசிய விடுதலைப் போராட்டமாகும். இவ் அடிப்படையில் இப்போராட்டம் அதற்கு முன்னைய சமூக அமைப்பை உடைக்க முயல்வது அதன் இயல்பேயாகும். இவ்வியல்பான போக்கிற்குக்கு எதிராக செயற்படுபவர்கள் பிற்போக்குவாதிகளே. எமது நாட்டில் நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பானது பெரும் நிலவுடமை சமூகத்தை கொண்டிருக்கவில்லை. ஆனால் நிலப்பிரபுத்துவத்தின் எல்லா சமூக அடக்குமுறை கருத்துக்களையும் தம்மகத்தே கொண்டுள்ள காரணத்தினால் கருத்துரூப ரீதியில் அச்சமூகத்தை கட்டுப்படுத்துகிறது.

முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கான ஏகாதிபத்தியம் மூன்றாவது மண்டல நாடுகளை கட்டுப்படுத்தும் கைக்கூலி சர்வதிகாரிகளான எதேச்சை அதிகார இராணுவ கும்பல்களுக்கு (உ+ம் பேரு, சிலி, கவுத்தமாலா, எல்சல்வடோர், பாகிஸ்தான், பங்களாதேஸ் தென்னாபிரிக்கா இராணுவ சதிகளுக்கு உட்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகள் பிலிப்பைன்ஸ்) இப் பிற்போக்குவாதிகள் சமூகத்தின் மேலான அடக்குமுறை குணாம்சம் காரணமாக இலகுவில் கருத்துரூப ரீதியில் விலைபோகும் தன்மையையும் கொண்டுள்ளனர். இன்று ஐரோப்பாவில் வாழ்கின்ற காரணத்தினால் இவர்கள் நாட்டில் உள்ள மற்றைய மக்களை விட பொருளாதார ரீதியில் மேம்பாடு உடையவர்களாகத் திகழ்கின்ற நிலை உள்ளது. இவர்களுடைய மூலதனங்களுக்கு எம் நாட்டில் உத்தரவாதம் வழங்கப்படுமாயின் எவ்வித நிபந்தனையும், சமூகப் பிரச்சினையும் அற்று, அடக்கு முறைகளை இவர்களும் ஆதரிப்பதுடன் அடக்கு முறையாளருக்கு முண்டும் கொடுப்பவர்களாக திகழப் போவதும் இவர்களே. இக் காரணங்களுக்காகவே இவர்களை தேசிய பிற்போக்குவாதிகள் என இனங்காணுகிறேன்.

## தேசிய வாதிகள்

இவர்கள் நாட்டின் இன்றைய சூழ்நிலைகளினால் மிகவும் பாதிப்புக்குள்ளாபவர்கள். இதனால் இவர்கள் மிகவும் மனோரீதியிலும் பாதிக்கப்படுகிறார்கள். சமூக உணர்வினால் சமூக வேலைகளுடனும், விடுதலை இயக்கங்களுடனும் தொடர்புடையவர்களாகவும் இயங்குபவர்களாகவும் உள்ளனர். ஆனால் ஸ்தாபன ரீதியில் இயங்குவதில் இவர்களிடம் பல குறைபாடுகள் உண்டு.

அரசியல் பொருளாதார ரீதியில் அறிவியல் காரணிகளால் உள்ள குறைபாடுகள் காரணமாக இயங்கியலில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை தனிநபர்களின் முரண்பாடுகளாக்கி விடுவது இவர்களிடம் உள்ள மிகப் பெரிய பலவீனமாகும். இதனால் இறுதியில் இம் முரண்பாடுகளை கையாளுவதிலேயே அதிக சக்தியையும் நேரத்தையும் செலவிடுவார்கள். ஸ்தாபன ரீதியில் இவர்களுடைய முரண்பாடுகள் அதிகமாக இடது தீவிர வாதிகளுடன் ஏற்படுகின்ற

www.padippakam.com

காரணத்தினால் இவர்களையும் இடது தீவிரவாதிகளையும் சமரசப்படுத்துவதே முற்போக்காளர்களுடைய பெரும் பணியாக அமைந்து விடுவது வழக்கமாகி விடுகிறது. இவர்களிடையேயுள்ள பிணக்குகள் தீர்க்கப்படாத பட்சத்தில் இவர்களே அவ்வமைப்புக்களின் பிளவுகளுக்கு காரணமாகி விடுவதுடன், தம்மை பலம் பொருந்தியவர்களாக நிரூபிப்பதற்காக பல சமயங்களில் பிற்போக்காளர்களுடன் சமரசமாகி விடுகின்றனர். சிலர் வெறுப்புணர்வு காரணமாக சமூக வேலைகளில் அதிக கவனம் செலுத்துபவர்களாகி சமூக சீர்திருத்தவாதிகள் அணிக்குள் சென்று விடுகின்றனர். இவர்களை அரசியல் ரீதியாகவும் கருத்து ரீதியாகவும் வளர்த்து எடுப்பதன் மூலம் இவர்களை முற்போக்காளர்கள் அணிக்குள் கொண்டு வருவதே முற்போக்கு அணியில் உள்ள புத்திஜீவிகளின் கடமையாக இருக்க முடியும்.

## சமூக உதிரிகள்

வெளிநாடுகளுக்கு புலம் புலம்பெயர்ந்தவர்களில் அதிகமானவர்கள் இளைஞர்களே. இவர்களில் பலர் ஐரோப்பிய நாடுகளை சொர்க்க புரிகளாக எண்ணிக் கொண்டு வந்தவர்கள். ஆனால் ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியானது இங்குள்ளவர்களை இயந்திரமயமான ஒரு வாழ்க்கைக்கும் தனிமைப்படுத்திய மனோநிலைகளுக்கும் கொண்டு சென்றிருப்பதை காண்கின்றனர். இதன் காரணத்தால் இத்தகைய சூழலுடன் சிலரால் இணைந்து கொள்ளவோ அல்லது சமரசம் செய்து கொள்ளவோ முடிவதில்லை. இது தவிர இவர்கள் நீண்ட தூரத்தில் உள்ள தமது உற்றார் உறவினர், குடும்பங்களை விட்டு அன்னியமான சூழலில் வாழ வேண்டிய நிலையுடன் நாட்டில் உள்ள அவல நிகழ்வுகளில் அவர்களுடன் தாங்களும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்கிற குற்ற உணர்விற்கும் ஆளாகிறார்கள்.

இதன் காரணமாக மனோ நிலை குழப்பங்களுக்கு ஆழாகி தமது தனிமையை மறப்பதற்கு மதுவை நாடி இறுதியில் அதற்கே அடிமையான சூழ்நிலைகளில் மனோ நோயாளர்களாக வாழ்கின்றனர். இவர்களில் இன்னொரு சாரார், தமது குடும்பங்களுக்காக உழைக்கும் நோக்குடன் ஆரம்பகாலங்களில் அதிக மணித்தியாலங்கள் வேலை செய்து ஈற்றில் அவற்றின் மீது வெறுப்படைந்தவர்கள். இந்நிலையில் மன சாந்திக்காக குடிபோதை, இரவு நடன விடுதி போன்றவற்றிற்கு சென்று இறுதியில் அவற்றை தமது வாழ்க்கையின் தேவையாக்கிக் கொண்டவர்கள். நாளடைவில் கலாச்சார முண்பாடுகளுக்கு உள்ளாகும் இவர்கள் சீரழிந்த ஐரோப்பிய கலாச்சாரத்தின் பிரதிநிதிகளாக மாறிப் போகின்றனர்.

சமூக உணர்வும், தேசப்பற்றும் உள்ள சமூக உதிரி மனப்பான்மை கொண்ட இன்னொரு சாராரும் உண்டு. இவர்கள் கடந்த காலங்களில் விடுதலை இயக்

www.padippakam.com

கங்களில் அதீத நம்பிக்கை வைத்து முழு அளவில் செயற்பட்டவர்கள். ஆனால் பொதுவாக எமது மக்களிடம் உள்ள அரசியல் வறுமை இவர்களை தீவிர சிங்கள எதிர்ப்பாளர்களாக உருவாக்கியிருந்தது. ஆனால் இவர்கள் செயற்பட்ட இயக்கங்களில் சிங்களவர்களுக் கெதிரான யுத்தத்தில் உள்ள செயற்பாட்டின் மையமானது இவர்களை அவ் வியக்கங்களில் நம்பிக்கை இழக்கச் செய்தது.

அக்காரணத்தினால் வெளியேறிய இவர்கள் தீவிர தேசிய வெறி காரணமாக ஒரு விதமான சமூக உணர்விற்கு உட்பட்டு ஒரு நிலையில் சமூகத்தின் மேலேயும், இன்னொரு நிலையில் இயக்கங்களின் மேலேயும் வெறுப்புணர்வு கொண்டு காணப்படுகிறார்கள். சில சமயங்களில் நிகழ்வுகளின் தாக்கங்களினாலும் ஏதாவது செய்ய வேண்டுமென்கிற நிலையில் குழப்பமடைந்தவர்களாக உள்ளனர்.

மற்றொரு சாரார் நாட்டில் விடுதலை இயக்கங்களில் தீவரமாக ஈடுட்டு அவற்றின் நடவடிக்கைகள் திருப்தி தராத காரணத்தினால் இயக்கங்களை விட்டு வெளியேறினார்கள். பின் இவர்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தும் சமூக உணர்வு காரணமாக ஒருவித குற்ற உணர்விற்கும், இயக்கங்களின் போக்குகளின் விளைவினால் அவற்றின் மேல் விரக்தி நிலைக்கும் ஆட்பட்டுள்ளார்கள். என்ன செய்வது என்பது கூடத் தெரியாத நிலையில் சமூகப் பிரக்ஞையிலிருந்து விலக முடியாமலும், அரசியல் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் ஒருவித வெறுப்புணர்வு கொண்டவர்களாகவும் காணப்படுகிறார்கள். இவர்களது இந்நிலையானது இவர்களை குழப்பவாதிகளாகவும், சமூக உதிரிகளாகவும் தோற்றமளிக்கச் செய்கிறது.

இவர்களை சரியான முறையில் அணுகவோ அல்லது நெறிப் படுத்தவோ கட்சியோ, அமைப்போ இல்லாதவிடத்து சமூகத்தின் மேலும் தனிநபர்கள் மீதும் இறுதியில் தம் மீதும் விரக்தியும், வெறுப்பும் கொண்டு வாழ்வதை காணக் கூடியதாக உள்ளது. இவர்கள் வெளிப்பார்வைக்கு வன்முறையில் இறங்கும் தெருச் சண்டியர்கள் போல் காணப்பட்டாலும் இவர்களுடன் நெருங்கிப் பழகும் போது பல நல்ல குணாம்சங்களை இவர்களிடம் அவதானிக்க முடிகிறது. உண்மையில் இவர்களிடம் காணப்படும் சமூக உணர்வுகள் காரணமாக சமூகத்தால் பாதிக்கப்பட்ட நல்ல உள்ளியல்புகளை கொண்டிருக்கிறார்கள். இந்த வகுப்பைச் சார்ந்த எமது இளைஞர்கள் பலரை இந்தியாவின் முக்கிய நகரங்களிலும் அதிகமாக காணமுடியும்.

இன்னொரு வகையான சமூக உதிரிகளுக்கே உரித்தான அத்தனை குணாம்சங்களைக் கொண்ட ஒரு சமூக விரோதக் கும்பல்களும் உண்டு. இவர்கள் மன்னிக்கப் படமுடியாத வகுப்பினர் ஆவர். இவர்கள் இந்தியா, ஐரோப்பா, கனடா, என எல்லா நாடுகளிலும் காணப்படுகிறார்கள். ஆனால் மிகக் குறைவான சதவீதத்தினராகவே உள்ளனர். இவர்

தொடர்ச்சி 16ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# கருத்துப் பரிமாற்றம்



## சஞ்சிகைகளும் தேடலும்

"நிதானமான கண்ணோட்டத்தை துறந்து வெற்றி பெற்ற எல்லாப் புரட்சிகர நிலமைகளிலும், எல்லா செயற் துறைகளிலும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டுமென நினைக்க முற்பட்டபோது பல மெய்யான புரட்சியாளர்கள் அழிக்கப் பட்டதுடன் அமைப்புக்களை விட்டு விலகிப் போனதும் கடந்த கால நிகழ்வுகளே"

சஞ்சிகைகளும் தேடலும் என்கிற தலைப்பில் சென்ற இதழில் இனியவனின் கட்டுரை எமது போராட்டம் தொடர்பான மார்க்சியவாதிகளின் நிலை பற்றியும், போராட்டங்களின் தன்மை பற்றியும், சஞ்சிகைகளின் "தேடல்" இன்றைய அரசியல் நிலமை பற்றிய மதிப்பீடுகளையும், பாட்டாளி வர்க்கத்தை அணிதிரட்டுவதற்கான கோசங்களை முன் வைத்து செயற்பட அகநிலை புற நிலை காரணிகளை தேடுவதாகவும் அமைந்திருக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்ப காலங்களில் இடது சாரிக் கருத்துக்களை முன்வைத்து செயற்பட்ட இயக்கங்கள் சிலவற்றின் கடந்த கால நிகழ்கால செயற்பாடுகள் முக்கியமாக இங்கு கவனத்திற் கொள்ளப் படுதல் அவசியமானதே. ஏனெனில் இத்தகைய இடதுசாரிக் கருத்துக்களை கொண்டிருந்த இயக்கங்கள் யதார்த்தத்தை சரியாக கணக்கில் கொள்ளாது அதிதீவிர சித்ததாந்தத்தில் மூழ்கி பிளவு பட்டுப் போனதும், விடுதலைப் புலிகள் போன்ற அதிதீவிர தேசிய வாத சக்திகளின் சர்வதிகாரப் போக்கிற்கு வழி சமைத்துக் கொடுத்ததிலும் இவ்வமைப்புக்கள் மாபெரும் தவறுகளை கடந்த காலங்களில் செய்துள்ளார்கள்

### யதார்த்தன்

இந்த நிலையில்தான், இடதுசாரிக் கருத்துக்களை அப்படியே குருட்டுத் தனமாக திணிக்காமல் இன்றைய யதார்த்தத்தை புரிந்து கொண்டு புதியதொரு நிலைப்பாட்டிற்கு வரவேண்டியதும், மக்களின் சுதந்திரமான கருத்துக்களை போராடும் அமைப்புக்கள் உள்வாங்க வேண்டிய சூழலை உருவாக்குவதும் இன்றைய நிலையில் அவசியமான பணியாக அனைவருக்கும் உள்ள கடமையாகும்.

அமைப்பு சார்ந்து இலக்கிய வெளியீடுகளை கொண்டு வருவோரும், அமைப்பு சாராது மக்கள் நிலையிலிருந்து


படிப்பகம்

www.padippakam.com

இலக்கிய வெளியீடுகளை கொண்டு வருவோரும் தமது கருத்துக்களை மக்கள் எவ்வளவு தூரம் உள்வாங்கிக் கொள்கிறார்கள் என்பதில் முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும். துரதிஸ்டவசமாக இத்தகைய ஒரு நிலை தவிர்ந்த ஒரு குருட்டு நிலைதான் இலக்கிய வெளியீடுகளில் தென்படுகிறது. பொதுவாக விடுதலை இயக்கங்களின் ஆயுத அராஜகம் தலை தூக்கிய போது பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஆகியவற்றின் கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளை எப்படி நசுக்கப் பட்டன என்பதை நாடே அறிந்த உண்மை. இந்த அராஜக சூழலிருந்து எந்த வொரு பத்திரிகையும், சஞ்சிகையும் விடுபட்டதாக இல்லை. இத்தகைய நிலையை தோற்கடித்து சுயமான அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் வெளியிட முடியாத நிலையில் ஈழத்தின் இலக்கிய வெளியீடுகள் இருக்கும் போது புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடையே வெளிவரும் சஞ்சிகைகள் மேற்குறிப்பிட்ட நிலையில்தான் உள்ளனவா? என்கிற கேள்வி எம்மில் இருந்து எழுகின்றது. வெளிநாடுகளுக்கு புலம் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடையே இருந்து வெளியாகும் இலக்கிய சஞ்சிகைகள் பற்றி கவனத்தில் கொள்வது அவசியமாகிறது. ஈழத்தில் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் அனுபவிக்க முடியாத கருத்துச் சுதந்திரத்தை புகலிட இலக்கிய வெளியீடுகளால் அனுபவிக்க முடிந்தாலும் அவற்றிற்கிடையில் பல முரண்பாடான போக்குகளை காணக் கூடியதாகவுள்ளது.

இப் புகலிட இலக்கியங்களில் அதிகமானவை சராசரி இலக்கியச் சஞ்சிகைகளாகவே உள்ளன. இவற்றிற்கு சமூக நோக்கு என்பது வெறுமனே மத்திய தர, மேல்தட்டு வர்க்கங்களை திருப்திப் படுத்தும் பிற்போக்குவாத கருத்தமைவுகளை பாதுகாப்பதைத் தவிர வேறெதுவுமில்லை. ஈழத்தின் சமகால அனர்த்த நிகழ்வுகளைப் பொறுத்த வரை அந்நியமான நிலை என்றேதான் சொல்லவாம். இத்தகைய சஞ்சிகைகளிலிருந்து மாறுபட்ட சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. இவை அமைப்பு சார்ந்த வெளியீடுகளாகவும் அமைப்பெதுவும் சாராத சுயாதீன சுதந்திரமான வெளியீடுகளாகவும் இவை காணப்படுகின்றன. இத்தகைய சஞ்சிகைகள் ஈழத்தின் யதார்த்த அரசியல் நிகழ்வுகளை கவனத்திற் கொள்வதுடன் பகிரங்கமாக தமது கருத்துக்களை முன் வைக்கின்றன. ஈழத்தில் மறுக்கப் பட்ட கருத்துச் சுதந்திரத்தை முழுமையாக இங்கு அனுபவிக்க முடியாவிட்டாலும் ஓரளவிற்கு தமது கருத்துக்களை வெளிப்படையாக முன் வைக்கின்றன. ஈழத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தை கருவறுத்த அராஜகத்தின் நாக்குகள் இங்கு அவ்வப்போ சில சஞ்சிகைகள் மீது தீண்ட முற்பட்டிருக்கின்றன. சில நாட்களுக்கு முன்பு கனடாவிலிருந்து வெளிவரும் "தாயகம்" என்னும் வாரப் பத்திரிகை மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் தடைவிதித்ததுடன் அப்பத்திரிகையின் ஆசிரியர் மீது தாக்குதல் மேற்கொண்டனர். இது போன்று பல ஜனநாயக விரோத நடவடிக்கைகள் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாலும் இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய மக்களும் இவற்றை தமக்கு சம்பந்தமற்ற ஒரு

www.padippakam.com

விடயமாகக் கருதுவதாலும் அல்லது இத்தகைய சம்பவங்களுக்கும் தமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என கருதி ஒதுங்கிக் கொள்வதாலும் இன்று பத்திரிகைகள் உட்பட பொது மக்களின் கருத்துச் சுதந்திரங்களுக்கு ஆப்பு வைக்கப் பட்ட நிலை தான் மேலோங்கியுள்ளது.

இத்தகைய நிலையிலும், சில சஞ்சிகைகள் ஜனநாயக மீறல்களுக்கெதிராக குரல் கொடுப்பதுடன் அமைப்பு எதுவும் சாராத போக்கினை கடைப் பிடித்து வருகின்றன. இயக்க வாதம் இயக்க நலன் என்பவற்றை தூக்கி எறிந்துவிட்டு மக்கள் சார்பு நிலையிலிருந்து கருத்துக்களை முன் வைத்து வெளியாகும் இச் சஞ்சிகைகள் புகலிட இலக்கிய படைப்புக்களில் புதிய பரிணாமத்தை அடைய முயலுகின்றன, கொலைப் பாரம்பரியங்களை நியாயப் படுத்த முயலும் நவீன போக்கிரித்தனமான கருத்தமைவுகள், மக்களின் அரசியல் அறியாமையை பயன்படுத்தி தத்தம் சந்தர்ப்பவாத போக்குகளை மக்கள் மத்தியில் நியாயப் படுத்தும் பிரச்சார சேவைகள், சர்வதேச பிற்போக்கு சக்திகளின் ஊடுருவல் இவை அனைத்தையும் இன்று மக்கள் மத்தியில் அம்பலப் படுத்துவது முக்கியமானதாகும்.

நிதான கண்ணோட்டத்தை துறந்து வெற்றி பெற்ற புரட்சிகர நிலமைகளிலும், எல்லா செயற்துறைகளிலும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டுமென நினைக்க முற்பட்ட போது பல மெய்யான புரட்சியாளர்கள் அழிக்கப் பட்டதுடன் அமைப்புக்களை விட்டு சிதறிப் போனதும் கடந்த கால நிகழ்வுகளே. இத்தகைய சக்திகள் இன்று அராஜகவாதிகளிடம் இருந்து தப்பித்துக் கொள்ள உலகம் பூராவும் பல மூலைகளிலும் பரவிக் கிடக்கிறார்கள். இவர்களிடம் உறைந்து போய் கிடக்கும் பல நல்ல கருத்துக்களை வெளிக் கொணருவதும் இவர்களை ஐக்கியப் படுத்தி எமது விடுதலைப் போராட்டத்தின் ஆரோக்கியமான முன்னெடுப்புக்கு வழிசமைத்துக் கொடுப்பதற்கும் முற்போக்குகரமான புகலிட இலக்கியங்கள் முன்வர வேண்டும்●

---

தேடலும் ஐக்கியமும்...

களில் அதிகமானவர்கள் இத் தேசிய விடுதலையைச் சீரழிப்பதில் அதிக பங்கு வகித்தவர்கள். தமது பொருளாதார, தனிநபர் அந்தஸ்துக்காக எதையும் செய்யக் கூடிய மிகப் பயங்கரமான ஆசாமிகள். இயக்கங்களில் கைக்கூலிகளாக செயற்பட்டவர்கள். போதைவஸ்து கடத்தல் முதல் அத்தனை சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டதுடன், சிலர் இயக்கங்களின் வெளிநாட்டு, உள்நாட்டு அடிதடி,கும்பல்களின் முகவர்களாக செயல்பட்டவர்கள். நிதி சேகரிப்பு மோசடிகளுடனும் தொடர்புடைய இவர்கள், அவற்றினூடாக சமூகத்தில் இன்று பொருளாதார நிலைகளில் அதிக வசதிகளைத் தேடிக் கொண்டவர்கள். இவர்கள் இனங்காணப்பட்டு தண்டிக்கப் படவேண்டியவர்கள். வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் முகவர்களில் ஒரு சிலரும் இவ்வகுப்பில் அடங்குவர்.

(தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியச் சந்திப்பு (8வது தொடர்)

இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சியின் எட்டாவது தொடர் எஸ்ஸன் (Essen) நகரில் 09.07.90 அன்று நடைபெற்றது வெகுஜனம், அக்னி, தூண்டில், புதுமை சிந்தனை, மண், நமதுகுரல் ஆகிய பத்திரிகைகளுடன் நீண்ட நாட்களுக்குப் பின் ஏலையா சஞ்சிகையும் சமூகமளித்திருந்ததை காணக் கூடியதாக இருந்தது. வழக்கம் போல் ஈழப் போராட்ட அனர்த்தங்களின் விளைவால் மரணித்த போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

நமது குரல் சஞ்சிகை ஆசிரியை தேவிகா கங்காதரன் வரவேற்புரை நிகழ்த்தியபின் வாசகர்கள், சஞ்சிகை ஆசிரியர்களின் சுய அறிமுகம் தொடர்ந்தது. வாசகர்களின் விமர்சனங்களின் விமர்சனங்கள் சற்று காரசாரமாாகவே அமைந்திருந்ததைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது. காலச் சுவடுகள் நாடகம் தொடர்பாக தூண்டில் சஞ்சிகையில் வெளிவந்த விமர்சனம் சிண்டு முடியும் நோக்கில் அமைந்துள்ளதாக நாடகத்தில் பங்கு பற்றிய பாலச்சந்திரன் குறிப்பிட்டார். அவரது விமர்சனத்தை ஏற்றுக் கொண்ட தூண்டில் சஞ்சிகைக் குழுவினர் அதற்கு வருத்தம் தெரிவித்தனர். மண் பத்திரிகையில் மலையக மக்களை மனிதாபிமான அடிப்படையில் திருப்பி அனுப்பப் பட வேண்டும் என குறிப்பிடப் பட்டதை தூண்டில் சஞ்சிகைக் குழுவைச் சேர்ந்த செல்வராஜா கடுமையாக விமர்சனம் செய்தார். ஆக்கங்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு எனக் குறிப்பிட்டு விட்டு ஆக்கங்களின் திருத்தம் நிராகரிப்பு எங்களுக்குரியது என மண் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார்கள் இது முரண்பாடாக உள்ளது என பாலச்சந்திரன் குறிப்பிட்டார். இது போன்ற தவறுகள் இனி இடம் பெறாது என மண் பத்திரிகை சார்பில் பதிலளிக்கப் பட்டது.

வெகுஜனம் சஞ்சிகையில் வெளியான சில கட்டுரைகளில் இடம் பெற்ற வார்த்தைப் பிரயோகங்களை தூண்டில் சஞ்சிகைக் குழுவைச் சேர்ந்த பார்த்திபன் ஒவ்வொன்றாக எடுத்து விமர்சித்தார். அவரது விமர்சனத்தின் போது மடச்சனங்கள் என்றால் யார்? வெங்காயச் சிந்தனை என்றால் என்ன? மக்களை கோயில் மாடுகள் எனக் குறிப்பிட்டது ஏன் எனப் பல கேள்விகளை தொடுத்திருந்தார். இவரது கேள்விகளுக்கு வெகுஜனம் சஞ்சிகை ஆசிரியர் அலெக்ஸ் பதிலளிக்கையில், வெகுஜனம் சஞ்சிகையில் இடம் பெறும் ஆக்கங்களுக்கும் எமக்கும் கருத்தொற்றுமை இருக்கின்ற படியால் அவற்றைப் பிரசுரிக்கிறோம். ஆக்கதாரர் வேறொருவராக இருக்கும் போது முற்று முழுக்க அவரது கட்டுரைக்கான விமர்சனத்திற்கு நாம் பதிலளிக்க முடி


படிப்பகம்

www.padippakam.com

யாது. எழுத்து மூலம் சஞ்சிகைக்கு விமர்சனங்கள் எழுதி அனுப்பப்படுமாயின் ஆக்கதாரர் பதில் கொடுப்பார் என குறிப்பிட்ட அவர், அரசியல் வடிவம் ஒன்று ஏற்படுத்தப் படும் போது சாரணையாக இருந்தது வெங்காயமாக முளைக்கலாம் என குறிப்பிட்டார். ஏவையா சஞ்சிகையில் இலக்கியச் சந்திப்பு என்கிற தலைப்பில் வெளியான கட்டுரையின் ஆரம்பத்தில் இலக்கியச் சந்திப்பின் போது மொட்டைக் கடிதமொன்று வாசிக்கப் பட்டதாக குறிப்பிட்டுள்ளார்கள். அங்கு மொட்டைக் கடிதம் வாசிக்கப் படவில்லை. பெயர்,முகவரி இல்லாது வருவதுதான் மொட்டைக் கடிதம். இலக்கியச் சந்திப்பில் வாசிக்கப் பட்டது கட்டுரையே தவிர மொட்டைக் கடிதமல்ல. என சிந்தனை ஆசிரியர் குறிப்பிட்டார். அக்னி சஞ்சிகையில் வாசகர்களின் கேள்வி பதிலில் இடம் பெற்ற பெண்விடுதலை பற்றிய கேள்வி பதிலொன்றை புதுமை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ரஞ்சினி விமர்சனம் செய்தார். அவரது கேள்விக்கு வந்திருந்த வாசகர் பதிலளித்தார். நிலப்பிரபுத்துவ சமூகத்திலிருந்து விடுபடாதவர்களுக்கு முதலாளித்துவ சமூக அமைப்பில் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற உரிமைகள் கலாச்சார சீரழிவாகத்தான் தெரியும். பெண்விடுதலை தொடர்பாக சரியான பார்வையும் தெளிவான நிலைப்பாடும் இல்லாது இருப்பின் அப் போராட்டம் தனிய ஆணாதிக்கத்திற் கெதிரான போராட்டமாக இருக்க முடியும். தெளிவான நிலைப்பாடும் சரியான பார்வையும் இல்லாது இன்று ஆயுதம் ஏந்தியுள்ள விடுதலைப் புலிகளிலுள்ள பெண் போராளிகள் பெண்கள் விடுதலைக்கு ஆயுதத்தையே தீர்வாக கொள்வார்களா, யின் அதன் விளைவு எப்படியிருக்கும் என கேள்வியொன்று எழுப்பப்பட்டது

வாசகர்கள் விமர்சனங்கள் என்கிற நிகழ்ச்சியில் சஞ்சிகையின் ஆசிரியர்களே இம்முறை வாசகர்களாக இருந்து விமர்சனம் செய்திருந்தார்கள். பெருமளவு வாசகர்கள் வேடிக்கை பார்க்க வந்திருப்பவர்கள் போல இருந்தார்கள். சொல்லப் போனால் சஞ்சிகைகளை சஞ்சிகைகளின் ஆசிரியர்களே விமர்சிக்க வேண்டிய நிலை தான் அன்றைய சந்திப்பில் இருந்தது.

இரண்டாவது நிகழ்ச்சியாக "உலகியல் ஒப்பு நோக்கில் எமது சமூக சமகால வளர்ச்சி" என்கிற தலைப்பின் கீழ் சிந்தனை ஆசிரியர் பரராஜசிங்கமும், வெகுஜனம் ஆசிரியர் அலெக்சும் தாம் தயார் செய்து கொண்டு வந்திருந்த கட்டுரைகளை வாசித்திருந்தார்கள். சிந்தனை ஆசிரியரின் கட்டுரையில், இலங்கை போன்ற ஒரு நாட்டின் வளர்ச்சியை மேற்கத்தைய நாடுகளின் வளர்ச்சியுடன் ஒப்பிட வேண்டுமாயின் வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியை எமது நாட்டு உற்பதத்தி உறவுகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடுவது அவசியமாகிறது எனக் குறிப்பிட்டிருந்தார். கட்டுரை வாசிப்பின் இறுதியில் இக்கட்டுரை பற்றி யாரும் பேசலாம், விவாதிக்கலாம். நான் இங்கு வெறும் எலும்

படிப்பகம்

www.padippakam.com

ம்புக் கூட்டைத்தான் தந்துள்ளேன். என அவர் குறிப்பிட்டார். இரண்டாவதாக கட்டுரையை வாசிப்பதற்கு முன், இக்கட்டுரையில் எனது பார்வை சமூகத்தைப் பற்றிய சிறிய ஆய்வு இது முழுமையானதல்ல என வெகுஜனம் ஆசிரியர் சிறு குறிப்பொன்றைக் கொடுத்துவிட்டு வாசிக்கத் தொடங்கினார். சாதியமைப்பினூடாக சமூகம் வளர்த்தெடுக்கப்படும் வர்க்க நிலையற்ற போக்கு, தரகு முதலாளித்துவத்தின் பேரினவாதப் போக்கு பெண்விடுதலை, கலவையாக்கப்பட்டு விட்ட பிற்போக்குவாதக் காரணிகள் முதலாளித்துவ பொருளாதார அமைப்பு முறைக்கான கல்வித் திட்டம் ஆகியவற்றை கட்டுரையில் உள்ளடக்கியிருந்தார்.

இவ்விரு கட்டுரைகளைப் பற்றிய வாகரகள் விமர்சனங்களின் போது, கடந்த காலங்களில் பேரினவாதத்திற்கு சமமானதாகவே தேசிய வாதம் செயற் பட்டிருக்கிறது. யூ.என்.பி அரசின் உற்பத்தி முறைகளிலும் பார்க்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உற்பத்தி முறைகளில் மக்கள் முன்னேறியிருந்தார்கள். சமூக மாற்றம் என்பது உற்பத்தி உறவுகளின் மாற்றத்திலேதான் தங்கியுள்ளது. இச் சமூக மாற்றத்தை ஊக்குவிக்க கலை இலக்கிய வாதிகளாலும் முடியும். நிலப்பிரபுத்துவத்திற்குரிய தன்மைகள் உற்பத்தி உறவுகளின் மாற்றத்தின் மூலமே மாற்றமடையும். கிழக்கு ஜெர்மனியின் உற்பத்திப் பொருட்கள் சந்தைக்கு வரவும் இல்லை. சந்தையில் போட்டியிடவும் இல்லை. அதனால் முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அவர்களால் அடையவும் முடியவில்லை. நாங்கள் கூட முன்னேறாமல் இருப்பதற்கும் உற்பத்தியுறவுகளில் ஏற்படாத மாற்றமே தான் என ஸீனி லோகநாதன் கருத்து தெரிவித்திருந்தார்.

மலையக மக்களும் நாங்களும் என்கிற தலைப்பின் கீழ் வெகுஜனம் ஆசிரியர் வேலாயுதம் அவர்கள் கட்டுரை வாசித்தார். மலையக மக்களின் வருகையிலிருந்து இன்றுவரை அவர்கள் ஆட்சியிலிருந்த இனவாத அரசாங்கங்களினால் படிப்படியாக ஒதுக்கப் பட்டது பற்றியும் அவர்களுக்கு இழைக்கப் பட்ட இன்னல்கள், அவர்களது அரசியல் தலைமைகள் என்பவற்றைப் பற்றிய பார்வையைக் கொண்டிருந்தாலும் இக்கட்டுரையின் இறுதிப் பகுதி வெறும் அறைகூவலை கொண்டிருப்பது போல அமைந்திருந்தது.

இக்கட்டுரை தொடர்பான விமர்சனங்கள் நீண்ட நேரம் ஆரோக்கியமானதாக அமைந்திருந்தன. மலையக மக்களும் நாங்களும் என்கிற கட்டுரையில் மலையக மக்கள் ஸ்தாபனமயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அவர்களை நாடு கடத்தப் போகிறார்களே என கூறியிருப்பதை பார்க்கும் போது ஏதோ சந்தர்ப்பத்தை இழந்து விடப் போகிறோமே என்பது போல உள்ளது என பாலசந்திரன் குறிப்பிட்டார். மலையக மக்களுக்கும் சூழ உள்ள சிங்கள விவசாய, பாட்டாளி மக்களுக்கும் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துவதா அல்லது வடக்கு கிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்களுக்கும் மலை

www.padippakam.com

யக மக்களுக்கும் புரிந்துணர்வை ஏற்படுத்துவதா சுலபமாக இருக்க முடியும் என்கிற கேள்வியை பத்மநாதன் என்கிற வாசகர் தொடுத்தார். இதே போல், தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தயாராக நிற்கின்ற வடக்கு கிழக்கு மக்களுக்கும், வர்க்க போராட்டத்திற்குத் தயாராக இருக்கின்ற மலையக மக்களுக்குமிடையே எப்படி ஒரு இணைவை ஏற்படுத்த முடியும் என்கிற கேள்வியை இன்னுமொரு வாசகர் தொடுத்தார்.

கவிதை விமர்சனம் என்கிற நிகழ்ச்சியில் பங்கேற்ற ஏலையா ஆசிரியர் முருகதாசன் அவர்கள் ஜெர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளில் இடம் பெற்ற கவிதைகளை விமர்சனப்படுத்தியிருந்தார். நீண்ட நேரங்கள் கவிதைகளை விமர்சனம் செய்திருந்தாலும் வந்திருந்த வாசகர்களை அதிகம் கவரவில்லை. ஏனெனில் விமர்சனம் செய்யப் பட்ட தொனி முன்னனுபவம் இல்லாத நிலையையும் எல்லாவற்றையும் ஒரே தடவையில் சொல்ல முற்பட்ட தன்மையும் என்று சொல்லாம். இவரது விமர்சனத்தை தொடர்ந்து சுசீந்திரன் என்னும் வாசகர் காங்கேசன் கோவிந்த குமாரது கவிதைகளை விமர்சனப்படுத்தினார். கோவிந்த குமாரது கவிதைகளில் அவலம், யாசிக்கின்ற தன்மை போன்ற தன்மைகள் தென்படுகின்றன. மேத்தா வைரமுத்து ஆகியோரது ஆரம்ப கால கவிதைகள் போல் ஓலமாகவும் இருக்கின்றன. கவிஞர்கள் புலம்புகிறார்கள். நாங்கள் வாசித்துக் கொண்டிருக்கிறோம். சொற்களைத் தேடுகின்ற பாதிப்பு கோவிந்தகுமாரது கவிதைகளில் காணப்படுகின்றது என விமர்சனத்தின் போது குறிப்பிட்டார் இறுதியாக நன்றியுரையுடன் முடிவுற்ற இலக்கியச் சந்திப்பின் ஒன்பதாவது தொடர் ஆலன் என்னுமிடத்தில் நடைபெறும் என அறிவிக்கப் பட்டது.

---

1989 மார்ச் மாதத்திலிருந்து 1990 மார்ச் வரையிலான காலப்பகுதிகளில் உலகம் முழுவதும் உள்ள நூறு நாடுகளில் சுமார் 250 தொழிற் சங்க உறுப்பினர்கள் அவர்களது தொழில் நிறுவன முதலாளிகளால் படுகொலை செய்யப் பட்டுள்ளார்கள். 13,000 பேர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். 10,000 பேர் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளார்கள். கொலம்பியா, எல் சல்வடோர், கௌதமாலா, பெரு, பிலிப்பைன்ஸ், சூடான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் சுதந்திரமான தொழிற்சங்க நடவடிக்கைகள் அபாயகரமானதாகவே இருக்கின்றன.

---

இலங்கையில் அங்கீகரிக்கப் பட்ட 27 கட்சிகள் உள்ளன. இவற்றில் 12 சிங்களக் கட்சிகளும், 10 இலங்கைத் தமிழ்க் கட்சிகளும் 3 இந்திய தமிழ் கட்சிகளும், 2 முஸ்லீம் கட்சிகளும் அடங்குகின்றன. 3/4 பங்கு சனத்தொகையினரான சிங்களமக்கள் மத்தியில் 12 கட்சிகளும், 1/8 பங்கு சனத்தொகையினராக உள்ள தமிழ் மக்கள் மத்தியில் 10 கட்சிகளும் உண்டு. இது தமிழர் மத்தியில் அபிப்பிராயம் எந்தளவுதூரம் பிளவுபட்டு கிடக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

வீரகேசரியில் இராச புத்திரன்.

www.padippakam.com

## கேள்வி – பதில்
## (வாசகர்கள் பங்குபற்றுதலுடன்)

● மார்க்ஸிஸ்டுகள் என தங்களைக் கருதிக் கொள்ளும் பலர் நடைமுறை வாழ்க்கையில் வரட்டுத்தனமான போக்குகளை கடைப்பிடிப்பது ஏன்?

உண்மையில் மார்க்ஸிஸ்டுகள் நடைமுறை வாழ்க்கையில் வரட்டுத்தனமான போக்கைக் கடைப்பிடிப்பதில்லை. மார்க்ஸியத்தை தமது மேதாவித்தனத்தை வெளிக்காட்டுவதற்காகப் பயன்படுத்துபவர்கள் நடைமுறையில் வரட்டுத் தனத்தை கடைப்பிடிக்கிறார்கள். இவர்களைப் போலவே சோவியத் யூனியனிலும் சிலர் இருந்தார்கள். சோவியத் புரட்சிக்குப் பின் பூர்சுவாக்களின் ரயில்களை மார்கஸிஸ்டுகள் உபயோகிக்க கூடாதெனவும் அவற்றை அழித்து விட்டு பாட்டாளி வர்க்க ரயில்கள் உற்பத்தி செய்யப் பட வேண்டுமெனவும் கூறினர். இதன் காரணத்தால் இவர்கள் "ஆதிகால குகை மனிதர்கள்" என அழைக்கப் பட்டனர். அவர்களின் வழித் தோன்றல்கள்தான் இவர்களும்.

சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு இடையில் உருவான யுத்தம் முஸ்லீம் நபரொருவரின் தகாத நடத்தையால் ஏற்பட்ட விளைவுதான் காரணமா?

அப்படி ஒரு பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப் பட்டுள்ளது. உண்மையில் அதுவல்ல. சிறிலங்கா அரசு ஈ.பி.ஆர்.எல்.எப்புடன் பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்ததினால் ஏற்பட்ட முரண்பாடு தான் முக்கிய காரணம். விடுதலைப் புலிகள் தமது ஏகப்பிரதிநிதித்துவத்திற்கு தடையாக எந்த சக்திகள் வந்தாலும் அவர்களை அழிக்காமல் விடுவதில்லை. அதற்காக அவர்கள் எந்தவொரு யுத்தத்திற்கும் தயாராவார்கள். முன்பு இந்தியப்படையினருடன் மோதுவதற்கு முக்கிய காரணமே அதிகாரம் முழுவதும் தமக்கு கிடைக்காமல் போனதுதானே.

● பத்மநாபா உட்பட ஈ.பி.ஆர்.எல் பின் முக்கிய உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் கொன்றது பற்றி.....

மாற்றுக் கருத்துக் கொன்றவர்கள் தமக்கு அடங்கிப் போக வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள்தான் விடுதலைப் புலிகள். ஈ.பி.ஆர்.எல்.எப்பை பொறுத்தவரை விடுதலைப் புலிகளுக்கு முக்கிய எதிரணியாக விளங்கி வந்த அமைப்பாகும். சிறிலங்கா அரசுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப்புக்குமிடையே இடம் பெற்று வரும் பேச்சுவார்த்தைகளை குழப்புவதற்கான முயற்சியும், அவ்வியக்கத்தை வேரோடு அழித்துவிடும் நீண்ட நாள் திட்டமுமாகும்.

● இலக்கியச் சந்திப்புத் தொடர் நிகழ்ச்சியானது தொடர்ந்து தாக்குப் பிடிக்குமா?

எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும், நடைமுறை ரீதியில் ஏற்படும் முரண்பாடுகளுக்கு மத்தியிலும் இத்தொடர் நிகழ்ச்சியானது இரண்டாவது வருடத்தை பூர்த்தி

படிப்பகம்

www.padippakam.com

செய்கிறது. நடைமுறையில் எழும் முரண்பாடுகளை விட்டுக் கொடுப்புக்களுடன் களைந்து சஞ்சிகைகளுக்கும் வாசகர்களுக்குமிடையில் புதிய உறவுகளை சிருஷ்டித்து வரும் இச்சந்திப்பு நிகழ்ச்சி தொடர்ந்து தாக்குப் பிடிக்குமா என்பது கலந்து கொள்ளும் முற்போக்கு கரமான சஞ்சிகைகளிலும் அதன் வாசகர்களிலும் தங்கியுள்ளது.

● உதிரிகளாக நின்று கொண்டு விடுதலை இயக்கங்களை விமர்சிப்பவர்கள் பற்றி என்ன கருது கிறீர்கள்?.

சமூகத்தின் இயங்கியல் வளர்ச்சி பற்றி விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை இல்லாது சமூக அந்தஸ்தை தேடிக் கொள்வதற்காக விமர்சிக்கிறார்கள் போலும். இந்தக் கேள்வி விவாதத்திற்குரிய ஒன்றாகும்.

● கடந்த வருட ஆரம்பத்திலிருந்து வெளிவந்த "திசை"ப் பத்திரிகை புலிகள் அமைப்பினரால் தடை செய்யப் பட்டுள்ளதாமே?

முற்போக்குகரமான பத்திரிகையாகவும் குடாநாட்டு ஏனைய தினசரிகளை விட வேறுபட்டதாகவும் வெளிவந்த இப்பத்திரிகை இந்தியராணுவம் வெளியேறிய பின் விடுதலைப்புலிகளுக்காதரவாக செய்திகளை வெளியிட்டு வந்தது. முற்போக்கான எந்த பத்திரிகையும் வலது தீவிர அமைப்புக்களை பட்டுவர்த்தனமாக ஆதரிக்க முற்பட்டால் இறுதி விளைவு இப்படித் தான் அமையும்.

● முதலாளித்துவம் உயிர்த் துடிப்புள்ளதாக இருந்து வருவதன் காரணம் என்ன?

அதன் நிர்வாகக் கட்டுக் கோப்பு என்பதுடன் தொழில் ஸ்தாபன பயிற்சியும் நிர்வாகப் பயிற்சிகளுமாகும். உலக முதலாளித்துவம் கொண்டிருக்கும் பலமும், பூர்சுவா வர்க்கத்திற்கு உள்ள தொடர்புகளின் பலமும் முதலாளித்துவ வர்க்கத்தை பலமுடையதாக வைத்திருக்கின்றன.

● தமிழ் பேசும் மக்களுக்குத் தலைவர்கள் என்று யாரும் இல்லை. அவர்களை விடுதலைப் புலிகள் அழித்து விட்டார்கள் என ரஞ்சன் விஜய ரட்னா கூறியுள்ளது பற்றி....

அமிர்தலிங்கம் கொல்லப் பட்ட போது அவரை விடுதலைப் புலிகள் கொல்லவில்லை என இறுதிவரை கூறி வந்த அவர் இப்போதாவது சில உண்மைகளை புரிந்து கொண்டிருக்கிறார் என்றே கருதத் தோன்றுகிறது.

● போர் நிறுத்தங்களும் பேச்சுவார்த்தைகளும் கடந்த காலங்களில் விடுதலை இயக்கங்களினதும் சிறிலங்கா அரசினதும் பலவீனப்பட்ட நிலமைகளிலேயே மேற்கொள்ளப்பட்டன. உண்மையில் இவை கடைப்பிடிக்கப் படுவதன் நோக்கங்கள் என்ன?

போராடும் அமைப்புக்களிடையேயுள்ள முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளவும், போராடும் சக்திகளை மேலும் பலப்படுத்திக் கொள்ளவும் சர்வதேச அளவிலும், தேசிய மட்டத்திலும் எதிரியை அம்பலப்படுத்தவும் இவை பயன்படுத்தப்படுகின்றன.


படிப்பகம்

www.padippakam.com

## அரசின் சதி நடவடிக்கை

வடக்கு கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப் பட்டு மூன்றுமாத கால ங்களுக்குள் மாகாணசபை ஆட்சியிலி ருந்த அமைப்புக்கள் தமிழின வாத மும் முஸ்லீம் விரோத வாதத்தையும் வெளிப்படுத்தின. நாவில் சோசலிச மும் நெஞ்சில் எரிச்சலும் பொறாமை யும் கொண்ட இக்கட்சிகள் வடக்கு கிழக்கு முஸ்லீம்களுக்கு சட்டபூர்வ மாக கிடைக்க வேண்டியவற்றை தர மறுத்ததால் இன்று வடக்கு கிழக்கு என்பது வாலறுந்த பட்டம் போலாகி விட்டது. விடுதலைப்புலிகளின் விவஸ் தை கெட்ட யுத்தத்தால் கிழக்கைப் பிரித்து விடும் பேரின வாதக் கட்சி கள் தம்பேதத்தை மறந்து ஒன்றுபடத் தொடங்கியுள்ளன. வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்து மக் கள் அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்தி வடக்கிலிருந்து கிழக்கை பிரித்து வடக்கில் தேர்தல் நடாத்த சூழ்நிலை இல்லாததால் கிழக்கில் மட்டும் தேர்தலை நடத்தி கிழக்கு மாகாண சபைக்கு சிங்களவர்களின் ஒத்தாசையோடு ஒரு முஸ்லீமை முதல் மந்திரியாக்கி கொஞ்சக் காலம் பம்மாத்துக் காட்டலாம்.

இந்த மக்கள் அபிப்பிராய வாக்கெ டுப்பிற்கு வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிப்பதற்கு கிழக்கில் 25% மான சிங் களமக்களுக்கு 35% மான முஸ்லீம் மக்கள் ஒத்துழைப்பு வழங்கப் பட வேண்டும். அப்படி முஸ்லீம்கள் வழங் கினால் 58% மான முஸ்லீம் சிங்கள மக்கள் கிழக்கின் இணைப்பை எதிர் த்தும் 42%க்கும் குறைவான தமிழ் மக்கள் ஆதரித்தும் வாக்களிப்பர். முடிவில் கிழக்கு பிரியும். இதைத் தான் இலங்கை அரசாங்கமும் எதிர் பார்த்துச் செயற்படுகிறது.
(முஸ்லீம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாவை கூறியது)

---

## சே!

சே!
என்ன கேவலம்?
கொலையைக் கூட
நாகரீகமாகச்
செய்ய முடியாத
காட்டுமிராண்டிகள்
ஆகிவிட்டோம்
சே!
என்ன ஞானம்
சத்தம் கேட்க
வேண்டும்
என்பதற்காகவே
சுட்டுக்
கொண்டிருக்கிறோம்
சே!
என்ன விந்தை?
இல்லாததற்காக
இருப்பவர்களையே
இல்லாதவர்கள்
ஆக்குகின்றோம்
சே!
என்ன தத்துவம்
எதிரியிடம்
துப்பாக்கி வாங்கி
சகோதரனைச் சுட்டுக்
கொண்டிருக்கிறோம்
சே!
என்ன தத்துவம்
அழிவில்லாமல் - இல்லையே
விடுதலை என்று
எம்மையே அழித்துக்
கொண்டிருக்கிறோம்.

பூங்குயிலன்

www.padippakam.com

## இரங்கல் கூட்டத்தில்....

விடுதலைப் புலிகளால் கொல்லப் பட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னணி உறுப்பினர் களுக்கு இரங்கல் கூட்டம் ஒன்று ஸ்ருட்கார்ட் நகரில் 30.06.90 அன்று நடைபெற்றது இவ்விரங்கல் கூட் டம் மேற்கு ஜேர்மன் கிளையினரால் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. தூர இடங்களில் இருந்து வரவேண்டிய ஆதரவாளர்களுக்காக கூட்டம் தாம தமாகவே ஆரம்பமாகியது.

முதலில் இருநிமிட மௌன அஞ் சலி மறைந்த உறுப்பினர்களுக்காக நிகழ்த்தப் பட்ட பின் பத்மநாபாவின் உரை ஒலிபரப்பு செய்யப்பட்டது. தெளிவாக உரையைக் கேட்கமுடியா தவாறு ஒலிப்பதிவு கரகத்துப் போயி ருந்தது. தலைமை வகித்து உரையாற் றிய போல் பிரகவாதன், முக்கிய உறுப்பினர்ககளை அழிப்பதனூடாக இயக்கத்தை அழித்துவிடலாம் எனக் கருதி முன்னணி உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் அழித்துள்ளார்கள் என தமதுரையின் போது குறிப்பிட் டார். பதமநாபாவின் அமைப்பு சார் ந்த செயற்பாடுகளை எடுத்துக் கூறி உரைநிகழ்த்திய அலெக்ஸ்,(ஈ.பி.ஆர் எல்.எப் சார்பாக) உண்மையாக ஈழ தேசத்தின் விடுதலைக்காகவும் ஆள ப்படும் வர்க்கம் ஆளும் வர்க்கமாக மாறும் வரை ஈழப்போராட்டம் முடி யப் போவதில்லை என ஆக்கப்பட்ட ஸ்தாபனம் ஈ.பி.ஆர்.எல்.எப்பாகும் கருத்துக்களை ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்தப் படவேண்டிய சூழல் உருவாக்கப் படவேண்டும் என்பதை நாம் எப்போதும் வலியுறுத்தி வந்துள் ளோம் என தமதுரையில் குறிப்பிட் டார். சிந்தனை ஆசிரியர் பரராஜசிங் கம் அவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப் சார் பாக உரை நிகழ்த்துவார் என அறிவி க்கப் பட்ட போது ஏற்பட்ட ஆச்சரி யம் நான் நிர்பந்தம் காரணமாக பேசவந்துள்ளேன் எனக் குறிப்பிட்ட போது இரு மடங்காகியது. எனினும் கடந்த காலங்களில் சிந்தனை சஞ்சி கை ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பான நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததமை குறிப்பிடத் தக்கது. சிறிலங்கா அர சும் விடுதலைப் புலிகளும் எதிர்ப் புரட்சிகர சக்திகள் எனக் குறிப்பிட்ட அவர், இத்தகைய சக்திகளை எதிர் கொள்ளவேண்டிய தேவை காலத்தி ற்கு காலம் புரட்சிகர சக்திகளுக்கு அவசியமாக இருந்தது. எமது முத லாவது எதிரி மக்கள் மத்தியில் இரு க்கிறார்கள். அவர்கள்தான் புலிகள் என கூறினார்.

எமது போராட்டத்தில் எமக் குள்ள முற்போக்கு சக்திகள் என்று சொல்லக் கூடிய ஒவ்வொருவரும் ஐக் கிய முன்னணி ஒன்றைக் கட்டியெழுப் பவில்லை.எமது நண்பன் யார் எதிரி யார் என தெரிந்து கொள்ள முடி யாத விளைவுதான் இது என தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் சார்பாக உரையாற்றிய பத்மநாதன் குறிப்பிட் டார். சிந்தனை, அக்னி, வெகுஜனம் ஆகிய சஞ்சிகைகளின் சார்பாக அவ ற்றின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர் கள் உரையாற்றினார்கள். உலகத்

படிப்பகம்

www.padippakam.com

தில் பாசிசம் நிலைத்து நின்றதுமில்லை. நிலைத்து நிற்க ஏனைய சக்திகள் விட்டதுமில்லை. பாசிச சக்திகளுக்கெதிராக ஈ.பி.ஆர்.எல்.எப். செயற்பட்ட வழிமுறைகளுக்கு மக்கள் எவ்வளவு தூரம் ஒத்துழைப்புக்கொடுத்தார்கள் என்பது கேள்விக் குறியான விடயம் தான் என வெகுஜனம் சஞ்சிகை சார்பாக உரையாற்றிய வேலாயுதம் குறிப்பிட்டார். பத்மநாபாவைச் சந்தித்து உரையாற்றிய சம்பவத்தை நினைவு கூர்ந்து, பொதுமக்கள் சார்பாக ஜெகநாதன் என்பவர் உரையாற்றினார். மேற்கு ஜெர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகள் சிலவற்றை விமர்சித்த இவர், மக்கள் சாகிறார்கள் என்பதற்கும் மக்களுக்காக சாகிறார்கள் என்பதற்கும் வித்தியாசம் தெரியாமல் சிலர் இடதுசாரி தீவிர சித்தாந்தம் கதைத்துக்கொண்டிருக்கிறார்கள் என தனது உரையில் குறிப்பிட்டார்.

இறுதியாக ஈ.பி.ஆர்.எல்.எப் மேற்கு ஜேர்மன் கிளை சார்பாக நன்றி தெரிவித்துப் பேசிய அருந்தவராஜா சற்று காரசாரமாகவே உரை நிகழ்த்தினார். கடந்த காலங்களில் மாகாண சபையை எதிர்த்து எழுதிய சஞ்சிகைகளை கடுமையாக விமர்சனம் செய்த அவர், பாசிசத்திற்கெதிராக எழுத யாரிடமும் ஐக்கியம் இல்லை . மக்களுக்கு அரசியல் வடிவம் ஏற்படுத்தப் படவேண்டும் என்பதற்காக மாகாண சபையை ஏற்றுக் கொண்டோம். ஈ.பி.ஆர்.எல்.எப் மாகாணசபையில் பங்கேற்றிய காலகட்டங்களில் தேர்தலில் நிற்க அனைத்து அமைப்புக்களுக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் புலிகள் அதிகாரம் செலுத்தும் இன்றைய காலகட்டங்களில் புலிகளும், அவர்களைச் சார்ந்தவர்களும் மட்டுமே தேர்தலில் நிற்கக் கூடிய நிலை உள்ளது என அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

இரங்கல் கூட்டமாக இருந்தாலும் கொல்லப்பட்டவர்களை நினைவு கூருவதை மட்டும் கொண்டிருக்காமல் ஆரோக்கியமான விமர்சனங்களும் கருத்துக்களும் முன்வைக்கப் பட்டமை வரவேற்கத் தக்கது. இருப்பினும் ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பாக நிகழ்த்தப் பட்ட உரைகள் பல விமர்சனத்திற்குரியவை. அருந்தவராஜாவின் [illegible] ஐக்கியம் தொடர்பாக அவர் கூறிய கருத்துக்கள் யதார்த்தமானவை. கடந்த காலங்களில் இயக்கங்களுக்கிடையில் இருதடவைகள் ஐக்கியம் ஏற்பட்டிருந்தது.(ஈழத் தேசிய விடுதலை முன்னணி, தமிழ் தேசிய சபை) இந்த இரு அமைப்புக்களிலும் ஈ.பி.ஆர்.எல்.எப். அங்கம் வகித்திருந்தது. ஆனால் இந்த ஐக்கிய முன்னணிகளின் தோல்வி பற்றி எவரும் குறிப்பிடவில்லை. பாசிசத்திற்கெதிராக எழுதுவதற்கு யாரிடமும் ஐக்கிய மில்லை என்கிற கருத்து ஏற்கக் கூடியதல்ல ஏனெனில் கடந்த வருடம் நோர்வேயில் வைத்து ஈ.பி ஆர்.எல்எப். பாராளுமன்ற உறுப்பினர் புலிகளின் ஆதரவாளர்களால் தாக்கப் பட்டபோது ஈ.பி.ஆர்.எல். எப் சார்பான நிலைப்பாடு கொண்டிருந்த சஞ்சிகைகள் எதுவித கருத்தும் தெரிவிக்காது மௌனமாகி விட்டன.

தொடர்ச்சி 31ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் இலக்கியத்தில் விதி ஆய்வு

இன்றைய முதலாளித்துவ சமுதாயத்தில் மதவாதிகளும், இலக்கிய வாதிகளும் "விதி" என்பது உயிர்கள் பிறக்கும்போது பிரமனால் அவர்கள் தலையில் எழுதிவைக்கப் படுகிறது என்று விளக்கம் கூறுகின்றனர். ஒருவன் நோய் வந்து இறந்தாலும், வறுமையால் நொந்து கஞ்சி கூட இன்றிச் செத்தாலும் அது அவன் தலைவிதிதான். படித்து வேலை இன்றித் திரிந்தாலும், விஞ்ஞானிகள் வறுமையால் வாடி வதங்கினாலும், பிச்சை எடுத்துச் செத்தாலும் எல்லாம் அவன் அவனுக்கு ஆண்டவன் எழுதிவைத்த தலைவிதி தான் காரணம் என முதலாளித்துவ தத்துவ ஞானிகள் சத்தியம் செய்து கூறுவர்.

வியாபாரிகள் அடிக்கிற கொள்ளைகளுக்கும், தொழில் மன்னர்களும் கள்ளக் கடத்தல் மன்னர்களும் அடிக்கின்ற கொள்ளை இலாபங்களுக்கு எல்லாம் ஆண்டவன் அவர்கள் தலையில் கோடீஸ்வரன் ஆக வேண்டும் என பிறக்கும் போது எழுதி வைத்ததுதான் காரணம் என்பர். அல்லது சென்ற பிறவியில் அந்த ஆன்மா செய்த புண்ணியம் தான் இந்தப் பிறவியில் கோடீஸ்வரன் ஆனதுக்கு காரணம் என அவர்கள் ஆராய்ச்சி உரை பகர்வர். முதலாளித்துவ சமுதாய அமைப்பின் விளைவுகள்தான் இந்த ஊழல் மலிந்த கொள்ளைகள். இந்த முதலாளித்துவ சமுதாய அமைப்பு இத்தகைய கொள்ளைகளையும், இலாபங்களையும் நியாயப் படுத்துகின்றது. சமுதாய விதி ஆக்குகின்றது என மார்க்சியம் நமக்குப் போதிக்கின்றது.

வரலாற்றை உருவாக்குபவன் மனிதனே. கடவுள் அன்று. அவ்வாறு மனிதர்களால் உருவாக்கப் பட்ட வரலாற்றிலே தமிழ் நாட்டில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு சமுதாயங்கள் அமைந்திருந்தன. அச் சமுதாயங்களில் இருந்த பொருளாதார நிலமைகளுக்கும், வர்க்கங் களுக்கும் ஏற்ப அங்கு சமுதாய விதி அமைந்திருந்தது.

## திருவாசன்

ஒரு சமுதாயத்தில் பொருளாதார நிலைக :ளும், வர்க்கங்களும் மாறும் போது அங்கு சமுதாய விதியும் மாறுகின்றது. விதி என்பதற்கு தமிழ் இலக்கியங்களில் பல்வேறு பொருள் கூறப்பட்டாலும், விளக்கங்கள் கூறப்பட்டாலும் மார்க்சீய மெய்ஞ்ஞானத்தின் மூலம் நாம் ஆராய்ந்தால் அச்சமுதாயத்தில் அவ்விதி ஏன் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது என்பதை தெளிவாகப் அறிந்து கொள்ளலாம்.

www.padippakam.com

"இனிய பொழில்கள் நெடிய வயல்கள் எண்ணரும் பெரு நாடு" என்று பாரதி போற்றும் நாடுதான் மருத நிலம். குளிர்ந்த சோலைகளும் வயல்களும் உருவான நிலம் ஆகும். காடுகளை வெட்டி உழுது பண்படுத்தப்பட்ட நிலம் முல்லை ஆகும். அங்கு 8 வகை தானியங்கள் உற்பத்தி ஆயிற்று. ஆனாலும் நெல் அங்கு உற்பத்தி ஆகவில்லை.

சங்க காலத்திலேயே குளம் வெட்டித் தண்ணீர் தேக்கினால் நஞ்சை நிலம் உருவாகும். நெல் சசாகுபடி மிகப் பெரும் அளவில் பெருகும் என்பதை மனிதன் அறிந்தான்.

"நிலன்எளி மருங்கில் நீர் நிலை பெருகத் தட்டோர்.அம்ம இவன் த்டோரே.தள்ளாதோர் இவண் தண்ணீரைத் தேக்கியவர்" (1)

பாண்டிய அரசனுக்கு புலவர் குடபுலவியனார் கூறிய ஒரு ஆலோசனை இக் கருத்து வளத்தால் தமிழ் நாடெங்கும் குளங்களும் ஏரிகளும் பெருகின. கிணறுகள் தோண்டப் பட்டன. கல்லணையைக் கரிகால் பெருவளத்தான் கட்டினான். காவிரியாற்றின் இரு பக்கங்களிலும் கரை எழுப்பிக் கால்வாய்கள் வெட்டினான். தஞ்சைத் தரணி தமிழ் நாட்டின் நெற் களஞ்சியம் ஆயிற்று.

(1) தட்டோர் - குளம் குட்டைகளில் தண்ணீரைத் தேக்கியவர்.

இவ்வாறு நஞ்சை நிலம் உருவான பின்புதான் விவசாயக் குடிமக்கள் ஆயிரம் ஆயிரம் கலநெல்லை ஒவ்வொருவரும் உற்பத்தி செய்து குவித்தனர். மலை போல மருத நிலத்தில் நெல்லின் செல்வம் குவிந்த பின்புதான் அவற்றைக் கொண்டு பெரும் படையை வேந்தன் உருவாக்க முடிந்தது. முல்லை நிலத்தில் சிறு சிறு படைகளையே குறுநில மன்னர் வைத்திருந்தனர். அந்தச் சிறு சிறு மன்னர்களின் நிலங்களைத் தங்கள் நாட்டுடன் சேர்த்துப் பெரும் நிலப்பரப்பை மருத நில வேந்தர் தமக்கு உரியதாக்கிக் கொண்டனர். இவ்வாறுதான் சேர,சோழ, பாண்டிய வேந்தர் உருவாயினர்.

"வேந்தன் மேய தீம் புனல் உலகம்"

தீம்புனல் உலகம் என்ற மருத நிலத்திற்கு வேந்தன் தலைவன் ஆனான் என்பது இதன் பொருள்.

## மக்கள் வாழ்க்கை

பாசன வசதி இல்லாத முல்லை நிலத்தில் இருந்த விவசாயிகள் தங்கள் தேவைக்குப் போதுமான தானியங்களைத்தான் உற்பத்தி செய்ய முடிந்தது. நீர்ப்பாசன வசதி பெற்றுவிட்ட மருத நிலத்தில் நெல்லையும் புல்லையும், கரும்பையும் பருப்பு வகைகளையும் மிகப் பெரும் அளவில் உற்பத்தி செய்தனர். நிலப் பிரபுத்துவ வர்க்கம் மிகப் பெரும் அளவில் வளர்ச்சி பெற்றது. முல்லை

www.padippakam.com

நிலத்தில் தோன்றிய பண்டமாற்று முறை உள்நாட்டு வியாபாரமாக மருத நிலத்தில் வளர்ச்சி பெற்றது. தேவைக்கு அதிகமாக இருந்த தானிய வகைகளைப் பெரு நிலக்கிழார்களே (நிலப்பிரபுக்கள்) வியாபாரத்தின் மூலம் விற்பனை செய்தனர்.

வேந்தர்கள் கோட்டை கட்டி அரசியல் ஆதிக்கத்தைப் பெருக்கினர் முல்லை நிலத்து குருநில மன்னன், நிலவரி வாங்குதல், சிறுபடையுடன் நிலங்களையும், எல்லைகளையும் பாதுகாத்தல் என்ற அளவிலே குறுகிய வட்டத்திற்குள்தான் அரசியலை நடாத்தி வந்தான். மருத நில வேந்தனோ நீதி, பரிபாலனம், நீர்ப் பாசனம், வாணிபம், நிலவரி, நாட்டுக் காவல் முதலிய பல வகையான துறைகளையும் உருவாக்கித் தன் ஆட்சியை வளர்த்தான். மக்களுடைய இல்லற வாழ்க்கையிலும், பொருள் தேடிய புற வாழ்க்கையிலும் அரசாங்கம் பெரும் அளவில் ஆதிக்கம் செலுத்தியது.

நிலப் பிரபுத்துவம் முழு அளவில் ஆதிக்கம் செலுத்தியது. அடிமை தொழில் செய்தோரும், சிறுசிறு தொழில் செய்வோரும் நிலக்கிழார் ஆதிக்கத்தில் நலிவுற்றனர்.

"அடியோர் பாங்கினும் வினைவவர் பாங்கினும் கடிவரையில் புறத்து என்மனார் புலவர்" (2)

---

(2) அடியோர்- அடிமைகள் வினை வலர் - சிறு தொழில் செய்வோர்.

இவர்களுக்கு பொருந்தாத காமம் என்ற இழிவான இல்லற வாழ்வே அவர்களுக்கு உரியது. பொருளாதார குறைபாடு, கல்வி அறிவின்மை அதனால் நாணம் முதலிய பண்பு இல்லாமை என்ற மூன்று காரணங்கள் காரணமாக அடிமைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் உயர்ந்த காதல் வாழ்க்கை வாழ இயலாது என உரையாசிரியர் கூறியுள்ளார். பெரு நிலக்கிழார்கள் மனைவியோடு மட்டும் இல்லற வாழ்க்கையை நிறுத்திக் கொள்ளவில்லை. காதல் பரத்தை, காமக் கிழத்தி, சேரிப் பரத்தை, பெரும் பொருள் தந்து மணந்து கொண்ட 2வது மனைவி இப்படி அவர்கள் பட்டியல் நீண்டது. நிலப்பிரபுக்கள் மருத நிலத்தின் செல்வ செழிப்பால் "மலர் தோறும் சென்று தேன் உண்ணும் வண்டு போல்" மகளிர் பலரோடு இன்பம் நுகர்ந்து மகிழ்ந்தனர்.. எனவே பெருநிலக்கிழார்களுக்கும் ஒத்த காதல் வாழ்க்கை இல்லை. பொருந்தாத காம வாழ்க்கையே அமைந்திருந்தது. பெண்களுக்கு கற்பு நெறி. ஆண்கள் விரும்பிய வாறு இன்பம் நுகரலாம் என்பது மருத நிலத்தின் சமுதாய விதி ஆயிற்று.

1. மேலே குறிப்பிட்ட காரணங்களால் நிலப்பிரபுத்துவ வர்க்கம் (நிலக்கிழார்) நன்கு வளர்ந்து ஆதிக்கம் செலுத்தியது.

2. முல்லை நிலத்தில் தோன்றிய குடும்பம் மருத நிலத்தில் பொருளாதார வளர்ச்சியால் பல்கிப் பெருகி குடும்பத் தலைவன் ஆதிக்கம் மேலோங்கியது. பெண்ணுக்கு மட்டும் கற்புநெறி என்று விதி

படிப்பகம்

www.padippakam.com

அமைந்தது. பெண் ஆணுக்கு அடங்கி நடக்கும் அடிமை ஆனாள்.

3. செல்வம் பெருகப் பெருக அடிமைகளும் சிறு தொழில் செய்வோரும் ஆயிரம் ஆயிரமாகப் பெருகினர். அரசாங்கம் பல பல புதுத் துறைகள் அமைத்து வரிகள் வாங்கிக் காவல் துறையின் மூலம் அடக்கி ஒடுக்கியதால் சுரண்டப் படும் வர்க்கம் (அடிமைகள், சிறு தொழில் செய்தோர்) மிகவும் நசுக்கப் பட்டது. நிலப் பிரபுத்துவ வர்க்கத்துக்கும் தொழிலாளர் அடிமை என்ற வர்க்கங்களுக்கும் வர்க்கப் போர் கூர்மை அடைந்தது.

நெய்தல்

கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் எனப்படும். "வருணன் மேய பெரு மணல் உலகமும்" பெருமணல் உலகம் என்பது கடற்கரைகளில் உரு வாகிய பட்டினம், பாக்கம் முதலிய நகரங்களைக் குறிக்கும். அங்குதான் பெருவணிகர் தங்கள் ஏழு அடுக்கு மாடிகளை எழுப்பி (ஏழுநிலை மாடம்) அதில் வண்ண ஓவியங்களைத் தீட்டி ஆடம்பர வாழ்வில் திளைத்திருந்தனர். சங்க காலத்திலேயே நாவாய், வங்கம் என்று அழைக்கப் பட்ட பாய்மரக் கப்பல்களைத் தமிழர் கட்டத் தொடங்கினர். காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து சுமத்திரா, ஜாவா, மலேசியா முதலிய கீழ்த்திசை நாடுகளுக்கும், சேர நாட்டில் மேற்கு கடற்கரை துறைமுகத்தில் இருந்து அரபு நாடுகள், கிரேக்க ரோமாபுரி நாடுகள் முதலிய யவன தேசங்களுக்கும் தமிழக வணிகர் அப்பாய் மரக்கப்பல்கள் மூலமே சென்று வாணிபத்தை மிகுதியாக வளர்த்தனர்.

மருத நிலத்தில் நிலக் கிழார் என்ற நிலப் பிரபுத்துவ வர்க்கமே உள்நாட்டு வாணிபத்தைப் பண்ட மாற்று முறையிலும், சில சமயம் காசுகள் கொடுத்தும் நடாத்தியது. ஆனால் இறக்குமதி ஏற்றுமதி வியாபாரம் மிதமிஞ்சி ஓங்கிய இடம் நெய்தல் நிலம்தான். இங்குள்ள பட்டினங்களில்தான் பெருவணிகர் வெள்ளிக் காசுகள் பொன் நவ மணிகள் முதலியவற்றுடன் பணப் பட்டுவாடா மூலம் வியாபாரத்தைப் பெருக்கினர். காவிரிப்பூம் பட்டினத்தில் உள் நாட்டுப் பொருட்களை ஏற்றிய நாவாய்களும், வெளிநாட்டுப் பொருட்களைக் கொண்டு வந்த நாவாய்களும் தங்கியிருந்தன. அரசாங்க இலச்சினை இட்டு சுங்க வரி வசூல் செய்யும் வரை அவை அத் துறைமுகத்தின் கடல் அலைகளில் அசைந்தாடிக் கொண்டிருப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருப்பதாகபட்டினப் பாலை என்ற இலக்கியம் பேசும் சிலப்பதிகாரமும் இக்காட்சி பற்றி அழகுபட வர்ணிக்கிறது.

பட்டினங்களில் பெருவணிகரை அடுத்து கைத்தொழில் செய்யும் தொழிலாளரும், சிறுவணிகரும் சேர்ந்து வாழ்ந்து வந்தனர். கடல் அலைகளிலே தோணி ஓட்டி மீன்பிடிக்கும் பரதவர் வாழ்க்கை

படிப்பகம்

www.padippakam.com

துன்பத்தில் மூழ்கி இருந்தது. கடலில் இறங்கி, மீன் பிடித்து, மீண்டும் கரை ஏறும் வரை நிச்சயமற்ற வாழ்க்கை, சாவு எந்த நேரம் வந்து தன்னைத் தழுவிக் கொள்ளுமோ என்று அஞ்சி அஞ்சிச் சாகும் வாழ்க்கை. பரதவர் சுரண்டப்படும் வர்க்கமாக அமைந்தனர். பிடித்து வந்த மீனை விற்கும் போது அடித்து குறைந்த விலைக்கு வாங்கும் வியாபார வர்க்கம் வாங்கிய பொருள்களை எல்லாம் இரண்டு அல்லது மூன்று மடங்கு விலைக்கு விற்று பொன்னையும், மலைபோல் குவித்து எல்லாரையும் ஆட்டிப் படைக்கும் வியாபார வர்க்கம் (உழைக்காமல் சுரண்டும் வியாபார வர்க்கம்) நெய்தல் நிலத்தில் தோன்றி விட்டது.

நெய்தல் என்ற சொல்லுக்கு நைதல் - துன்புறுதல் என்று நச்சினாக்கினியர் என்ற உரையாசிரியர் பொருள் தருகிறார். இரங்கல் என்ற உரிப்பொருளையே தொல்காப்பியர் நெய்தல் நிலத்திற்கு அமைத்துள்ளார். துன்பத்தால் இரங்கி இரங்கி வருந்திற் சாவதுதான் நெய்தல் நிலத்தில் தோன்றிய பரதவர் என்ற உழைக்கும் வர்க்கத்தின் சமுதாய விதியாக அமைந்தது.

பெருவணிகர்கள் வாங்கியதை விட பலமடங்கு பொருளின் விலையை உயர்த்தித்தான் மலைபோலச் செல்வம் சேர்த்தனர். சிலப்பதிகாரத் தலைவனாகிய கோவலனின் தந்தை மாசத்துவன் என்ற வணிகன் "குன்றம் அன்ன செல்வம்" சேர்த்து வைத்தான். ஆகவே கரிகால பெருவளத்தான் என்ற அரசன் அத்தாணி மண்டபத்தே தலைமை வணிகனாக மதிக் கப்பட்டு அரசனுக்கு அருகே ஆசனத்தில் அமர்ந்திருந்தான். பெருநிலக் கிழார் என்ற நிலப் பிரபுத்துவ வர்க்கத்துவ வர்க்கத்துக்கும் அவர்களின் தலைவனாம் பெருவேந்தனுக்கும் சவால் விடும் அளவிற்கு இப் பெரு வணிகர் கூட்டம் செல்வச் செழிப்பிலே கொடி கட்டிப் பறந்தனர் என்றால் அது மிகையா காது.

வணிகர்களின் பெருமையை பறை சாற்ற வந்ததே சிலப்பதிகாரம் என்பதை நாம் அறிவோம்.

அக்காப்பியத்தின் தலைவி கண்ணகி மதுரை நகரில் பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்த்துச் சவால் விடுவதை நாம் பார்க்கிறோம். கோவலன் கள்வன் அல்ல. மிக நல்ல உள்ளம் கொண்டவன் என்பதும் பாண்டியன் ஆராயாது கொன்றான். அது குற்றம் என்பதும் சரியே, ஆனால் பாண்டியன் கோவலனைக் கொல்வதற்கு ஒரு காரணத்தை கண்ணகி கற்பிக்கிறாள். அக் காரணத்தில்தான் வர்க்க முரண்பாடு பளிச்சிடுகின்றது. வெளிப்படையாகத் தெரிகின்றது.

www.padippakam.com

என் சிலம்பை விலை கொடுத்து வாங்கிக் கொள்வதற்கு மன்னவனிடம் பொற்காசுகள் இல்லை. நவமணிகள் பதிக்கப் பெற்றது என் காற்சிலம்பு ஆகவே கொன்று சிலம்பைக் கைப்பற்றினர் என்று கண்ணகி கூறுகிறாள். மதுரை நகரத்து மக்களிடம் வியாபார வர்க்கம்தான் மற்றைய வர்க்கங்களை விட உயர்ந்த வர்க்கம் என்பதை நிலை நாட்டப்போராடுவது தெரிகிறது.

மருத நிலத்தில் நிலக்கிழார்கள் மனைவியோடு நிற்காமல், காதல் பரத்தை, காமக் கிழத்தி என்று பல பெண்களோடு வாழ்ந்தனர். எனப் பார்த்தோம். திருமணம் செய்து கொள்ளாத அந்தக் காமக் கிழத்தியும் காதல் பரத்தையும் நிலக்கிழாராகிய தலைவனோடு மட்டும் உரிமை பூண்டு வாழ்ந்தனர். ஆனால் வேசியர் என்று பணத்திற்காக உடலை விற்கும் ஒரு குலம் அங்கு தோன்றவில்லை.

(மிகுதி அடுத்த இதழில்)

இரங்கல் கூட்டத்தில்...

மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் இடம்பெற்ற போதெல்லாம் மாகாண சபையை விமர்சித்து எழுதி வந்த சஞ்சிகைகள் தான் பகிரங்கமாக கண்டனம் செய்து கருத்துக்களை தெரிவித்திருந்தன. பாசிசத்திற்கெதிராக ஈ.பி.ஆர்.எல.எப். மேற்க்கொண்ட நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்புக் கொடுத்திருந்தார்கள் என்கிற கேள்வி எழுப்பப் எழுப்பப்பட்டிருந்தது. மாகாணசபையில் பங்கேற்றிய பின் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் போராளிகள் மேற்கொண்ட அணுகுமுறைகள் விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாக அமைந்ததையும் மறப்பதற்கில்லை.

ஆரம்ப காலகட்டங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பானது சாதிரீதியாக ஒடுக்கப் பட்ட மக்களிடையே அரசியல் வேலைத்திட்டங்களை முன்வைத்து செயற்பட்டு வந்ததுடன் போராட்ட உணர்வை வளர்த்தெடுப்பதில் காத்திரமான பங்களிப்பை ஆற்றியுமிருக்கிறது. இத்தகைய ஒரு புரட்சிகரமான அமைப்பு இந்திய அரசை நம்பி செயற்பட்ட போக்கானது ஏற்படுத்தியுள்ள இறுதி விளைவுகள்தான் இந்தப் படுகொலைகளாகும்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் யாழ்ப்பாணத்திலிருந்து "சற்றர்டே றிவியூவின்" சகோதரப் பத்திரிகையாக வெளிவந்த "திசை" வாரப்பத்திரிகை விடுதலைப்புலிகளால் தடை செய்யப் பட்டுள்ளது. முற்போக்குகரமான பத்திரிகையாகவும் யதார்த்த போராட்டசூழலில் திசை பல கருத்து விவாதங்களை கொண்ட பயனுள்ள பத்திரிகையாகவும் கருதப் பட்டது. திசையில் வெளியான ஆக்கங்கள் விடுதலைப் புலிகளின் தமிழீழச் செய்திகள் உட்பட பெரும்பாலான வெளிநாட்டு தமிழ் சஞ்சிகைகளிலும் மறுபிரசுரம் செய்யப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

படிப்பகம்

# 13.07.98 அன்று பொன் நகரில் இடம்பெற்ற உண்ணாவிரதத்திற்கான அழைப்பு கோரி இலங்கையர் சங்கத்தால் விடப் பட்ட துண்டுப் பிரசுரம்.

இனங்களுக்கிடையில் சமாதானத்தைக் கொண்டுவருவதாகவும், பேச்சுவார்த்தைகள் மூலமாகவே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள விரும்புவதாகவும், தமக்கிடையேயான பகைமைகளை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் பரஸ்பரம் கூறிக் கொண்ட இலங்கையரசும், எல்.ரி.ரியும் திரைமறைவுப் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டன. அமைதி நிலை திரும்பிவிட்டதாகவும் நிர்வாகங்கள் ஒழுங்காக நடப்பதாகவும் இருதரப்பு உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் பிரச்சாரங்களை மேற்கொண்டன.

ஆனால், நாட்டில் நடக்கும் கொலைகளும் அழிவுச் செயல்களும் ஒரு போதும் நிறுத்தப் படவேயில்லை. இலங்கை அரசும், எல்.ரி.ரியும் தமது அரசியலுக்கு எதிரானவர்களையும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இயங்குபவர்களையும் கடத்தியும் சிறையிலடைத்தும் கொலை செய்தும் வருகின்றன.

இந்நிலையில் ஜூன் மாதம் 12ந் திகதி இலங்கை அரசபடைகளுக்கும், எல்.ரி.ரிக்கும் இடையில் திடீரென ஏற்பட்ட மோதலில் இன்றுவரை ஆயிரக்கணக்கான மக்கள் வெட்டியும், தீ மூட்டியும் குண்டு வீசியும் கொல்லப் பட்டுள்ளார்கள். பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளார்கள். இலட்சக்கணக்கானவர்கள் வீடுகளையிழந்தும் அகதிகளாக உணவு, மருத்துவ சிகிச்சை போன்ற எந்தவித நிவாரணங்களுமின்றி அவலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் கிழக்கு மாகாணம் தற்போது அரசபடைகளின் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு இளைஞர்கள் தீ மூட்டி எரிக்கப்படுவதும், நாள்தோறும் நூற்றுக்கணக்கில் கடத்தப் படுவதும் தொடர்கிறது.

எல்.ரி.ரி.ஈயினால் ஏதுமறியாத சிறுபிள்ளைகள் மோதல்களுக்கு அனுப்பப் பட்டுப் பலியாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசின் போர்விமானத் தாக்குதல்களால் வைத்தியசாலைகள், பாடசாலைகள், கன்னியர் மடங்கள், அனாதை விடுதிகள் போன்றனவும் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளன.

மின்சார, உணவு விநியோகமும், போக்குவரத்துச் சேவையும் இலங்கை அரசால் தடுக்கப் பட்டுள்ளன. கொல்லப் பட்டவர்களின் விபரம், காயமடைந்தவர்களின் நிலை, அகதிகளின் விபரம் போன்றன வெளியே தெரியவராதபடி அரசால் மூடி மறைக்கப் பட்டுள்ளன.

அத்துடன் ஏனைய இயக்கங்கள் தமது அரசியல் எதிரியான எல்.ரி.ரி.யைப் பழிவாங்குவதற்காக அரசின் மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, மக்களுக்கு எதிராக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

தற்போதைய வடக்கு கிழக்கு நிலமைகளைப் பயன்படுத்தி அரச ஆதரவு

தற்போதைய வடக்கு கிழக்கு நிலமைகளைப் பயன்படுத்தி அரச ஆதரவு ஆயுதபாணிகளால் மலையக மக்கள் கடத்திச் செல்லப்பட்டு வருவதுடன், வயல்களும், உடைமைகளும் தீ மூட்டி எரிக்கப் படுகின்றன.

இந்நிலமைகளில் இலங்கை அரசாலும், இயக்கங்களாலும் முற்றாகப் புறக்கணிக்கப் பட்டும், அகதிகளாகத் துன்பப் பட்டும், அழிவுகளையும் இழப்புகளையும் நேருக்கு நேர் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இலங்கை மக்கள் சார்பாக பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து 13.07.98 அன்று ஒருநாள் உண்ணாவிரதம் அனுஸ்டிக்கிறோம்.

கோரிக்கைகள்:

1. மக்களுக்கு இழப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இம் மோதல்கள் இலங்கையரசினாலும், எல்.ரி.ரி.யினாலும் நிறுத்தப் படவேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.
2. தென்னிலங்கையிலும், மலையகத்திலும் அரசினால் நடாத்தப்படும் படுகொலைகள் உடனே நிறுத்தப் படவேண்டும்.
3. அகதிகளுக்கும் காயமடைந்தவர்களுக்கும் பாதிக்கப் பட்டவர்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கப் படவேண்டும்.
4. உணவு,மருத்துவ, போக்குவரத்து தடைகள் நீக்கப் பட்டு, அனைத்து விநியோகங்களும் உடனடியாக மேற்கொள்ளப் படவேண்டும்.
5. கைதுகள் நிறுத்தப்படுவதுடன், கைதானவர்கள் உடனே விடுவிக்கப் படவேண்டும்.
6. செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் சங்கங்கள் ஆகியன பாதிக்கப் பட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிடவும், பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து நிவாரணங்கள் வழங்கவும அனுமதி வழங்கப் படவேண்டும்.
7. மலையக மக்கள் கட்டாயமாக நாடு கடத்துவதை கைவிட வேண்டும்.

மேற்கு ஜேர்மன் மக்களிடமும் மேற்கு ஜேர்மனியில் இருக்கும் மனித உரிமைகள் சங்கங்களிடமும் நாம் கீழ் வரும் வேண்டுகோளை விடுக்கின்றோம்.

1. இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளால் கிடைக்கும் வருமானத்தில் இலங்கையரசு ஆயுதங்கள் வாங்கியும், கூலிப்படைகளுக்குச் சம்பளம் கொடுத்தும் இலங்கையிலுள்ள அனைத்து மக்கள் மீதும் ஒடுக்குமுறையை மேற்கொண்டு வருகிறது. இதைத் தவிர்க்கு முகமாக இலங்கைக்கு உல்லாசப் பயணம் மேற்கொளவதை தவிர்க்கவும்.

இலங்கையரசுக்கு வழங்கப் படும் நன்கொடைகளும் கடன் உதவிகளும் மக்கள் மீது அடக்கு முறைகளை பிரயோகிக்கவும், அரசு தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவுமே பயன்படுத்தப் படுகின்றது. எனவே ஜேர்மனி அரசாங்கமோ, வேறு நிறுவனங்களோ, உலக வங்கியோ இலங்கையரசுக்குப் பணம் கொடுப்பதை தடுக்க உதவுங்கள்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## உண்ணாவிரதம்...

உண்ணாவிரதமும், ஊர்வலங்களும் எதிர்ப்பைக் காட்டுகின்ற நடவடிக்கைகள் மட்டுமல்ல, அரசியலில் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளுகின்ற செயற்பாடுகளும் கூட. கடந்தகாலங்களில் இத்தகைய போராட்டங்கள் விடுதலை அமைப்புக்களின் அரசியல் தேவைகள் கருதி நடாத்தப் பட்டதுடன் மக்கள் எந்தளவிற்கு இதனால் அரசியல் மயப்படுத்தப் படுகிறார்கள் என்பதில் அவர்கள் எதுவித கவனமும் செலுத்தியதாகத் தெரியவில்லை. இதன் காரணத்தால், இன்று இத்தகைய செயற்பாடுகள் மீது மக்களுக்கு வெறுப்புணர்வு ஏற்பட்டுள்ளதை காணக் கூடியதாகவும் உள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் மோதலில் கொல்லப்பட்டும் அகதிகளாக்கப் பட்டும் வரும் மக்கள் மீதான அழிவுகளை நிறுத்தும்படி இலங்கையர் சங்கம் 13.07.90 அன்று மேற்கு ஜெர்மனியின் தலைநகரான பொன் நகரில் ஒரு உண்ணாவிரதம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. காலை ஒன்பது மணியிலிருந்து மாலை ஆறு மணிவரை நடை பெற்ற இவ் வுண்ணாவிரதத்தில் மிகக் குறைவான தொகையினரே கலந்துகொண்டனர்.

இலங்கையர் சங்கமானது மேற்கு ஜெர்மனியில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களினால் ஒழுங்கமைக்கப் பட்ட அரசியல் கட்சி, இயக்க சார்பற்ற ஒரு அமைப்பாகும். இவ்வமைப்பின் முதலாவது நடவடிக்கையாக இவ்வருட ஆரம்பத்தில் ஒரு மறியல் போராட்டமொன்றை இலங்கை தூதுவராலயத்திற்கு முன்பு நடாத்தியிருந்தது. இவ்வமைப்பின் மொத்த உறுப்பினர்களது தொகை அல்லது இதனுடைய ஒட்டு மொத்தமான பலம் என்பது இன்னும் சரியாக கணிப்பிடக் கூடியதாக இல்லை

இவ்வமைப்பின் இரண்டாவது நடவடிக்கையாக இடம்பெற்ற மேற்படி உண்ணாவிரதத்தில் சிங்கள இளைஞர்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தது. பங்கு பற்றிய தமிழர்களிடையே இவ்வுண்ணாவிரதத்திற்கான அழைப்பு குறித்தும், வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் சம்பந்தமாகவும் கருத்து வேறுபாடுகள் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

துண்டுப் பிரசுரத்தில் (முன் பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளது) எல்.ரி.ரியினால் ஏதுமறியாத சிறுவர்கள் மோதல்களுக்கு அனுப்பப் பட்டு பலியாக்கப் படுகிறார்கள் எனவும், ஏனைய இயக்கங்கள் தமது அரசியல் எதிரியான எல்.ரி.ரியை பழிவாங்குவதற்காக அரசின் மிலேச்சத் தனமான தாக்குதல்களுக்கு வக்காலாத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் எனவும், தற்போதைய வடக்கு கிழக்கு நிலமைகளைப் பயன்படுத்தி அரச ஆயுத பாணிகளால் மலையக மக்கள் கடத்திக் கொல்லப் பட்டு வருவதுடன்... எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதில் பலவிதமான கருத்து வேறு


படிப்பகம்

www.padippakam.com

பாடுகள் கொண்டிருந்தவர்களை அணுகிய போது தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். இன்றைக்கு நாட்டில் நிலவும் யதார்த்த சூழலில் சிறுபிள்ளைகள் போராட்டத்தில் இணைவதும் அல்லது எல்.ரி.ரி.ஈ அவர்களை இணைத்துக் கொள்வதும் தவிர்க்க முடியாததாக அமைந்துள்ளது. அத்துடன் எல்.ரி.ரி யின் தவறான யுத்த தந்திரோபாயங்களுக்கு எண்ணற்ற போராளிகள் தமது உயிரை அநியாயமாக இழந்து வருகின்றனர். இப் போராளிகளின் இத்தகைய பலியெடுப்புகளுக்கு அவர்களது அரசியல் தலைமையே முழுப் பொறுப்பெடுக்க வேண்டும். அத்துடன், அனைத்து

மாருதி

இயக்கங்களும் அரசின் மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கு வக்காலாத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் இயக்கங்களின் பெயர்களை குறிப்பிடப்படாததால் அது முரண்பாடன கருத்தையே கொண்டிருப்பதுடன் இயக்கங்களின் மீதான காழ்ப்புணர்வையும் கொண்டிருக்கிறது. வடக்கு கிழக்கு நிலமைகளை பயன்படுத்தி மலையக மக்களை அரச ஆயுதபாணிகள் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப் படும் நிகழ்ச்சியானது கடந்த காலங்களில் இருந்தே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கிழக்கு மாகாணங்களிலும் மலையகத்திலும் மக்கள் அரச ராணுவத்தின் பயங்கரவாதச் செயல்களுக்கு உட்பட்ட போதெல்லாம் வெளிநாடுகளில் உள்ள விடுதலை அமைப்புக்களின் கிளைகளும், உலகத் தமிழர் அமைப்புக்களும் எந்தவிதமான எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற் கொள்ளவில்லை. ஆனாலும் வடக்கில் பாதிப்பு ஏற்பட்டவுடன் விழுந்தடித்து ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் என்றெல்லாம் நடாத்திக் கொள்கிறார்கள். அத்துடன் தமது பிரச்சாரத் தேவைகளுக்காக கிழக்கு, மலையக மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்துப் பிரச்சாரத்தை மேற் கொள்கிறார்கள் இது ஒரு கசப்பான உண்மையென்கிறதால் பலர் இதனை ஏற்றுக் கொள்வதில்லை.

தமிழ் மக்கள் ஒட்டு மொத்தமாக பாதிக்கப் பட்டதற் கெதிராக நடைபெற்ற இவ்வுண்ணாவிரதத்தில் பங்கு பற்றிய சிங்கள இளைஞர்களின் உற்சாகமான செயற்பாடுகள், ஜெர்மனியில் தஞ்சம் கோரி வாழும் இருபதனாயிரம் தமிழர்களின் உணர்வுகளை குத்திக் காட்டுவதாக அமைந்தது. இதற்கு உண்ணாவிரதத்தில் பங்கு பெற்றாத தமிழர்களை ஒட்டு மொத்தமாக குறை சொல்லவும் முடியாது ஏனெனில், இதனை ஒழுங்கு செய்தவர்கள் பரவலான பிரச்சாரத்தை மேற்கொள்ளவில்லை என்பதுடன் குறுகிய நாட்களுக்குள் அவசர அவசரமாக மேற்கொண்ட நடவடிக்கையும் ஒரு காரணமாகும். ஜெர்மனி அரசாங்கம் வதிவிட உரிமை (இமிக்கிறேசன்) வழுங்க முன்வந்ததால் இங்கு வாழும் எமது மக்களிடம் இந்த நடவடிக்கைகளுக்கு ஆர்வமில்லாத நிலையை ஊட்டியதோ என்கிற சந்தேகம் எனக்குள் தட்டிச் சென்றது.

---

மனித நாகரீகத்தின் மீது மனிதக் குரங்குகள் நடாத்தும் படையெடுப்பே பாசிசமாகும்.

- பாவ்லோவ்

படிப்பகம்

www.padippakam.com

# நிகழ்வுகள்

கட்டாய நாடு கடத்தல், அனைத்துக் கட்சிகளையும் ஒன்று சேர்ந்து தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கூட்டிய மகாநாட்டினை அர்த்தமற்ற தாக்கி விடும் என ஈழவர் ஜனநாயக முன்னணி அறிக்கை தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள ஒருலட்சம் இந்திய வம்சாவளியினரையும் ஒரே முறையில் ஏற்றுக் கொள்ள தமிழகம் தயாராக இல்லை எனவும் அவ்வாறு செய்வது சாத்தியமற்றதாகும் என மத்திய அரசுக்கு தெரிவித்திருப்பதாக மு.கருணாநிதி அறிவித்தார்.

இலங்கையில் இந்திய அமைதிப் படை தங்கியிருந்த 30 மாத காலத்திற்குள் குறைந்தது 1163 இந்தியா வீரர்கள் கொல்லப் பட்டும், 2982 பேர்கள் காயம் அடைந்தும் உள்ளனர். மேலும் கடந்த மார்ச் மாதம் முடிவடைந்த இந்திய ராணுவ நடவடிக்கைச் செலவாக 388 கோடி ரூபாக்கள் செலவு செய்யப்பட்டிருக்கிறது

தனிநபர்களை கொலை செய்வதன் மூலம் அரசியற் கருத்துக்களை அழித்து விட முடியாதெனவும் அரசியற் தலைவர்களையும், பிரமுகர்களையும் படுகொலை செய்யவதில் ஈடுபட்டவர்கள் உணரவேண்டுமென ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தமது அறிக்கை ஒன்றில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பல வருடங்களுக்கு முன்பு இந்திய பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்து கடவுச்சீட்டு பெற்றுக் கொண்ட ஒரு வட்சத்திற்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்களை உடனடியாக இந்தியயாவிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென ரஞ்சன் விஜயரட்ன கூறியிருப்பது விசனத்திற்குரியதாகும். அரசின் மனிதாபிமான இத்தகைய செயலை இம்முடிவை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது) வன்மையாக கண்டிக்கிறது. அத்துடன் சுய விருப்பமின்றி எந்த வொரு தொழிலாளியும் கட்டாயத்தின் பேரில் இந்தியாவிற்கு அனுப்பப்படுவதை எமது கட்சி எதிர்க்கிறது என அக்கட்சியின் மத்திய குழு வெளியிட்டுள்ள தனது அறிக்கையொான்றில் தெரிவித்துள்ளது.

வட- கிழக்கு முஸ்லீம்களின் எதிர்காலம் பற்றிய விடுதலைப் புலிகளின் தெளிவான நிலைப்பாடு தெரிந்த பின்னரே 6வது தடைச் சட்டத்தை நீக்க ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது பற்றி முஸ்லீம் காங்கிரஸ் தீர்மானிக்கும் என அக்கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கையில் இந்தியப் படை ஆற்றிய பணி குறித்து விமர்சிப்பது சரியல்ல என்று இந்தியப் பிரதமர் வி.பி.சிங் கூறியுள்ளார்.

இந்திய அமைதிப் படைக்கும், மத்திய அரசின் "ரோ" அமைப்பிற்கும் எதிரான ஆதாரமற்ற குற்றச் சாட்டிற்காக தமிழக முதல்வர் கருணாநிதிக்கு எதிராக மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென காங்கிரஸ் எம்பிக்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

அரசியலமைப்பின் 6வது தடைச் சட்டத்தை நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் ஈரோஸ் கொண்டு வரவுள்ள தனியார் சட்ட மூலத்திற்கு சில தரப்புக்கள் ஆதரவு தராமல் போகலாம். இதனால் இச் சட்ட மூலத்தினை அரசாங்கமே கொண்டு வருவது நல்லது என ஈ.பி.ஆர்.எல்.எப் எம்பி பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என தங்களைக் கூறிக் கொள்கின்ற புலிகள் ஆயுதங்களை கீழே வைத்து விட்டு அதனை நிரூபித்துக் காட்டட்டும். புலிகள் ஜனநாயகத்தின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷரப் பாராளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி உருவாக்கப் பட்டதால் தமிழீழ மகளிர் மத்தியில் எமது விடுதலைப் போராட்டம் சம்பந்தமான ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. பெண்களின் பங்களிப்பினால் எமது விடுதலைப்


படிப்பகம்

www.padippakam.com

போராட்டம் முழுமை பெற்று முன்னேற்றம் அடைந்துள்ளது என புலிகளின் அரசியல் கட்சித் தலைவர் மாத்தையா தெரிவித்துள்ளார்.

சீதனம் வாங்கும் முறை ஒழிக்கப் பட வேண்டும். தமிழீழ பெண்களுக் கெதிரான ஒடுக்குமுறை நிறுத்தப் படவேண்டும் எனக் கோரும் தீர்மானங்கள் விடுதலைப் புலிகளின் மகளிர் அணியின் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணித்த தலைவர் சந்திர சேகரன் விடுவிக்கப் படுவார் என வழங்கப்பட்ட உறுதி மொழியை அடுத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்களும், உண்ணாவிரதம் இருந்தவர்களும் தமது செயற்பாடுகளை கைவிட்டனர்.

எம்மோடு பேச்சுவார்ததை நடத்துவதன் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்பதனை தெரிந்தும் கூட இலங்கை அரசு ஈ.பி.ஆர்.எல்.எப் துரோகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்னும் கூட ஜனாதிபதி பிரேமதாசாவின் நோக்கங்களை நாம் ஆதரிக்கிறோம். அவர் மீது எமக்கு நம்பிக்கையுண்டு. தமிழர்களை குருடர்களாக முட்டாள்களாக கருதினால் அதுவே விபரீதமாக முடியுமென விடுதலைப் புலிகளின் வன்னியப் பொறுப்பாளர் சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற டெலோவின் அரசியல் கூட்டத்தில் புதிய நிர்வாக மாற்றங்கள் செய்யப் பட்டு அடைக்கல நாதன் செல்வம் தலைவராகவும், கே.கருணாகரன் செயலதிபராகவும், உபதலைவர்களாக இளங்கோ,குகன்சாட் ஆகியோரும் நிர்வாக செயலாளர் கிறிஸ்டி,உதவி செயலதிபர்களாக என்.சொக்கன், கே.மித்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

## ஆயுள் ரேகை

எனது பக்கங்களை
இப்ப நான்
திருத்திக் கொண்டிருக்கிறேன்.
மரணம் வரும்போது
இயமன் வருவதில்லை
இயக்கம்தான் வரும்
ஆண்டவனின் தொழில்கள்
ஐந்தல்ல!
ஆயுள் ரேகையை - நான்
நம்புவதேயில்லை.
காணாமல் போனவர்களின்
அட்டவணையே - மிச்சம்
நம்புகிறேன்.

பூங்குயிலன்.

## மொழி பெயர்ப்பு

" மக்களுக்காகவே
துப்பாக்கி
ஏந்தினோம்"
அதன்
மான்மீகம்
ஆன்மீகம்
அனாதையாகி
மக்களைச்
சுட்டுப் பொசுக்கியே
வேளை புரிந்தது
அவர்கள்
சொன்னபடியே
செய்கிறார்கள்
இவர்கள்தான்
பிழையாக
மொழி பெயர்த்தவர்கள்.

பூங்குயிலன்.

www.padippakam.com

# மரணத்தின் கோலம்

ஸ்பானிய மொழியில்: பாப்லோ நேருடா

தமிழில்: வருணன் (பேர்வின்)

கைவிடப்பட்ட மயான அமைதி நிலவங்கள்
எலும்புகளால் நிறைந்த கல்லறைகள்
அங்கு இதயம் சுரங்கத்தினூடாக வலம் வரும்
இருள், இருள், இருள்
நாங்களே எங்களில் மூழ்கினால்
நாங்கள் இறந்து விடுகிறோம்.
எங்கள் இதயத்தினுள் கப்பல்
மூழ்கிய துன்பம்
உடலிலிருந்து ஆத்மா தழுவிய
இறக்க உணர்வு

சடலங்கள்
உறைந்து, ஒட்டுகின்ற கற்களிடையே கால்கள்
எலும்புகளால் உருவான மரணம்
சத்தத்தை தவிர வேறு போன்றதல்ல
நாய் இல்லாத குரைப்பு போல
சில மணிகளிலிருந்து, சில கல்லறைகளிலிரருந்து
மரணம் பாய்கிறது
மழை போன்று ஈரத்தில் மரணம் வீங்குகிறது

நான் தனிமையயில் இருக்கும் போது
ஒவ்வொரு தடவையும் பார்க்கிறேன்
பிரேதப் பெட்டி நங்கூரமெடுத்து
கடற்பிரயாணத்தை ஆரம்பிக்கிறது.
அங்கு நோவவாவின் பேழையில்
வெளிறிய காவமானவர்கள் - இறந்த
கூந்தலுடன் கூடிய பெண்கள்
அழகிய தேவதைகள் போன்ற
பாண் சுடுபவர்கள்
சிந்தனையில் மூழ்கிய பருவக் குமரிககள்
சட்டத் தரணிகளை மணந்தவர்கள்

நிலைக் குத்தான செவ்வருவியில்
மேலே பிரேதப் பெட்டி நகர்கிறது.
மரணத்தின் மௌன ஒலியால் சுற்றிவர
அடைக்கப் பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

மௌன ஒலியின் அணைக்கட்டை
மரணம் தழுவுகிறது.
காலில்லாத சப்பாத்து போன்று,
மனிதன் அணியாத உடை போன்று,
காலில்லாத மோதிரம். - விரலில்லாத
மோதிரம் போன்று தாக்குதல்
கழுத்து, வாய், நாவில்லாத போராட்டம்
அதன் காலடியோசை எதிரொலிக்கிறது.
மௌனம், தனது கிளைகளை சலசல வைக்கும்
மரம் போன்று.

எனக்கு தெரியவில்லை. மிகக் குறைந்தளவு அனுபவம்
என்னால் அதிகம் பார்க்க முடியவில்லை.
ஆனால், நான் கருதுகிறேன்.
மரணத்தின் தோற்றம் பசுமையானது
அதன் முகம் பசுமையானாலும்
குளிர்காலத்தில் இருள் வீசும்

துடைப்ப வேடமணிந்து உலகினோடு வலம் வருகிறது
பூவுலககில் இறப்பவனை தேடுகிறது
மரணத்தை குவிக்கிறது
அதனுடைய நா இறப்பை சுவைக்க விரும்புகிறது
அதனுடைய ஊசி நூலை தேடுகிறது
வெற்றுப் படுக்கையில் சாவு குடி கொண்டுள்ளது
களைப்படைந்த மெத்தையில் கறுப்பு போர்வையுடன்
நீட்டிப் படுத்திருக்கும். ஒரேயொரு தடவை மூச்சு விடும்
மெதுவான மூச்சு, படுக்கை விரிப்பு நடுங்கும்
கடற்படைத் தளபதி உருவில் எதிர்பார்த்து மரணம் நிற்க
துறை முகத்தை படுக்கை அடையும்

---

எமது மே - யூன் மாதத்திற்கான இதழ் தவிர்க்கமுடியாத சில நடை முறை பிரச்சினைகள் காரணமாக யூலை மாதத்தில் வெளியாகின்றது. யூலை - ஆகஸ்ட் மாத இதழ் ஆகஸ்ட் மாத தனி இதழாகவே வெளிவரும் என்பதை அறியத்தருகிறோம்.


ஆசிரியர் குழு.

படிப்பகம்

www.padippakam.com

வெளிவருகிறது!

# கதிர்




தொடர்புகட்கு:
KATHIR
Ritter str.4 - 5
1000 Berriin 61
West Germany

* 01 யூலை 1990
* அரசியல் இதழ்: 01
* அன்பளிப்பு: 5 DM.

படிப்பகம்